# கண்டிராஜன் ஒப்பாரி



பதிப்பாசிரியர்

கலாநிதி முருகு தயாநிதி

கண்டிராஜன் ஒப்பாரி

# கண்டிராஜன் ஒப்பாரி

பதிப்பாசிரியர்

**கலாநிதி முருகு தயாநிதி**

வெளியீடு

**கலைப்பூக்கள் கலைக்கழகம்**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கண்டிராஜன் ஒப்பாரி |
| பதிப்பாசிரியர் ஆசிரியர் | : | முருகு தயாநிதி |
| பதிப்புரிமை | : | முருகு தயாநிதி |
| வெளியீடு | : | கலைப்பூக்கள் கலைக்கழகம் |
| அச்சு | : | எவகிறீன் அச்சகம் பிறைவேட் லிமிடட், மட்டக்களப்பு. |
| ISBN | : | 978-955-43173-2-1 |
| விலை | : | 350.00 |

| | | |
|---|---|---|
| Title | : | Kandyrajan Oppary |
| Edited by | : | Murugu Thayanithy |
| Copyright | : | Murugu Thayanithy |
| Published by | : | Kalaippookkal Kalaikkalagam |
| Print | : | Evergreen Printers (Pvt) Ltd, Batticaloa. |
| ISBN | : | 978-955-43173-2-1 |
| Price | : | 350.00 |

கண்டிராஜன் ஒப்பாரி நூலினை பேணி வருபவரும்
அப்பிரதியினை எனக்கு மனமுவந்து தந்துதவிய
பண்டாரியாவெளிக் கிராமத்தினைச் சேர்ந்த சின்னத்தம்பி
பரிகாரியார், கண்டிராஜன் ஒப்பாரிப் பாடலைப் பாடிய
வால்கட்டுக் கிராமத்தினைச் சேர்ந்த பரமாத்தை,
இறைபதமடைந்த லெட்சுமிப்பிள்ளை ஆகியோருக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

## அணிந்துரை

கண்டியரசன் கதை, இலங்கைத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். இலங்கையில் இனமுரண்பாடுகள் முற்றி, உள்நாட்டு யுத்தமாகப் பரிமாணமுற்றதால், தமிழர் வாழிடங்கள் தமது இயல்பு நிலையை இழப்பதற்கு முன்பு, அவ்விடங்களில் மேடையேற்றப்பட்ட பிரசித்தமான நாடகங்களில் ஒன்று கண்டிராசன் நாடகம். வழிபாடல்களின்போது பாடப்படும் சடங்குப் பாடல் களின் முடிவில் பாடப்படும் வாழ்த்துப்பாடல்களில் கண்டியரசனும் வாழ்த்தப்பட்டுள்ளான். நாட்டார் மரபின் வழிப்பட்ட ஆக்கங்களில் மாத்திரமன்றி, நெந்நெறி இலக்கியங்களிலும் கண்டியரசன் வாழ்த்தப் பெறு கின்றான். வெருகல் சித்திரவேலாயுதர் காதல் அவ்வகை யில் குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கைப் பிராந்தியங்கள், காலத்துக்குக் காலம் கண்டியரசின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தமை அப் பிரதேச இலக்கியங்களில் அவன் பாடப்படுவதற்கான காரணமாகலாம். ஆனால், எக்காலத்திலும் கண்டியரசின் ஆளுகைக்கு உட்படாத யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த, நல்லூர் சின்னத்தம்பிப் புலவரும் தமது படைப் பொன்றில் கண்டியரசனை பிரக்ஞை பூர்வமாகப் பாடுகின்றார் - வாழ்த்திப்பாடுகின்றார். இங்கு கூறப்பட்டவை எல்லாம் தமிழர் பிராந்தியங்கள்,

ஐரோப்பியர் ஆட்சிக்குள் அடங்கியிருந்த காலத்தில் எழுந்த இலக்கியங்களாகும். அவ்வாறான நிலையில் கண்டியரசன் பாடப்பட்டதற்கான காரணம் யாது? தமிழ் அறியாத அன்னியருக்கு ஆட்பட்ட அவலத்துள் வாழ்ந்த தமிழர்களுக்கு, அருகே நடைபெறும் தமிழறிந்த மன்னனது ஆட்சி ஒருவகைத் திருப்தியைத் தந்திருக்கக்கூடும். தமிழ்ப் புலவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும்போது அத்திறமையை விளங்கிப் பாராட்டிச் சன்மானிக்கக்கூடிய மன்னனென்ற தகுதி அக்காலப் பகுதியில் இலங்கைத்தீவில் அவனிடமே இருந்தது. அதாவது அவன் தமிழறிந்த – தமிழ் பேசும் மன்னனாகத் திகழ்ந்தான். தமிழ்ப் பிராந்தியப் புலவர்கள் இடையிடையே கண்டிக்குச் சென்று அரசனைக் கண்டு சன்மானம் பெற்று வந்தமைக்குச் சான்றும் உண்டு.

கண்டியரசன் என்ற ஒற்றைச் சொல்லால் குறிப்பிடப் பட்டாலும் இந்த இலக்கியங்களில் பாடப்பட்ட கண்டியரசன் ஒருவனல்ல. கண்டியில் வேறு வேறு காலங்களில் ஆட்சி புரிந்த வேறு வேறு அரசர்கள் பாடப்பட்டிருக்கின்றார்கள். கண்டியரசன் ஒப்பாரியில் சுட்டப்பெறும் கண்டியரசன் கண்டிராச்சியத்தின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என்பது வெளிப் படையாகத் தெரிக்கின்றது. அவன் ஆங்கிலேயரால் சிறைப்பிடிக்கப்பட்டமையே இந்த ஒப்பாரி பாடுவதற்குக் காரணமானது. கண்டியரசன் கதையென்று

பிரசித்தமான அக்கதை அவனது முறைகேடான பெண்ணாசையையும் அது நிறைவேறாத நிலையில் அவன் செய்த கொடூரச் செயலையுமே பிரதானமாக விபரிக்கின்றது. அவனது ஆட்சி பறிபோவதற்குக் காரணமானவையும் அவையே. இந்த ஒப்பாரியும் அவற்றையெல்லாம் பாடி, "துன்பம் ஒருக்காலும் தோகையர்க்குச் செய்யாமல் இன்பமாக இவ்வுலகில் இனிதாக வாழியவே" என்ற நீதி போதிக்கப்பட்டாலும், அவனது அழிவிலே கொண்ட ஆறாத் துயரே அதன் அடிநாதமாக ஒலிக்கிறது. தம்மவரை அன்னியருக்குக் காட்டிக்கொடுப்பவர்கள் கதி எத்தகையதாகும் என்ற பாடத்தை ஆலம்பிள்ளையின் கதிமூலம் வலியுறுத்துவதோடு ஒப்பாரி முடிவுபெறுகின்றமையும் அவதானிக்கத்தக்கது.

எவ்வாறாயினும் இந்த ஒப்பாரி ஒரு காலகட்டத்து ஈழத்தமிழ்ச் சமுதாயத்தின் மன உணர்ச்சியின் வெளிப்பாடாக விளங்குவது என்பதை மறுதலிக்க முடியாது. குறித்த காலத்தில் மாத்திரமன்றி அந்த மனநிலை அச்சமுதாயத்தில் தொடர்ந்து நிலைத்திருந்தது என்பதை இந்த வாய்மொழி இலக்கியம் தொடர்ந்து பெற்றிருந்த செல்வாக்கு உணர்த்துகின்றது.

வாய்மொழியிலக்கியம் காலத்துக்குக் காலம் மாற்றங் களுக்கு உள்ளாவது என்பதும் இந்த ஒப்பாரி மூலம்

புலனாகின்றது. வாய்மொழி மரபில் வந்த இந்த இலக்கியம் எழுதியும் பேணப்பட்டது என்பதும் இதில் தெளிவாகின்றது. எழுதிப் பேணப்பட்டது வாய்ப்புக் கிடைத்தபோது அச்சிலும் ஏற்றப்பட்டது என்பதும் புலனாகின்றது. அப்பணியை யார் செய்தார் என்ற பதிப்பு விபரமும் கிடைக்கின்றது.

"சொன்னார்கள் முன்னோர்கள் சுருக்கமா யிக்கதையை
மென்மேலும் கீர்த்திபெற்று விளங்கி நடந்திடவே
ஊராரு மிக்கதைதான் எளிதா யுலகிலுள்ளோர்
படித்து அறியவென்று பக்குவமாய்ச் சீர்திருத்தி
முன்னோரெழுதி வைத்த முறைமையைத் தழுவி
இன்னாளி லெவரும் இலகுவாய்க் கற்றறிய
பாரிலுள்ளோர்க்குப் பற்பல புத்தகங்களைச்
சீரிய வழியிற் செய்துதவி வருபவராம்
சரஸ்வதி புத்தகசாலை யதிபர்க ளச்சிட்டு
பிரசித்தியுடனே விற்பவருமிக்கதையை
அன்பாய்ப் படித்தோர்கள் ஆசையாய்க் கேட்டவர்கள்
துன்பமொருக்காலம் தோகையர்க்குச் செய்யாமல்
இன்பமாக இவ்வுலகில் இனிதாக வாழியவே"

கண்டியரசன் ஒப்பாரியின் முடிவுரைபோல அமையும் இப்பகுதி, அந்த வாய்மொழி இலக்கியத்தின் வரலா றாகவே அமைகின்றது. அந்த வரலாற்றில், இப்போது கலாநிதி முருகு தயாநிதியும் இணைந்து கொள்கின்றார். ஒப்பாரியின் அச்சுப் பிரதிகள் அருகிவிட்ட நிலையில்

சிதைந்த நிலையில் கிடைத்த ஒரே ஒரு பிரதியை வைத்துக்கொண்டு, வாய்மொழி மரபாகப் பேணி வந்த பெண்களைக் கொண்டு, சிதைவால் உண்டான இடை வெளியை நிரப்பிப் பதிப்பித்துத் தருகின்றார் அவர். இப்படியான பணிகள் மூலம் ஈழத்து இலக்கிய வலராற்றின் இடைவெளிகள் நிரப்பப்படலாம். இத்தகைய இலக்கியங்கள் நேர்மையோடு செவ்விய முறையிலே பதிப்பிக்கப்பட வேண்டியது எமது இருப்பை நிலைநாட்டும் முயற்சியாகவும் அமையும். தயாநிதி ஈழத்துக் கலாநிதியத்தைப் பெருக்குவதற்கு எடுத்திருக்கும் முயற்சிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

**கலாநிதி க. இரகுபரன்**
முதுநிலை விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | vi |
| 1. ஆய்வுப் பதிப்புரை | 1 |
| 2. கண்டிராஜன் ஒப்பாரிப் பாடல் | 46 |

# ஆய்வுப் பதிப்புரை

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும். நாட்டுப்புற மக்களது வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள இப்பாடல்கள் மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகளை பிரதிபலித்து நிற்கின்றது. ஒப்பாரி நாட்டுப்பாடல் வகைகளில் ஒன்று. அது இறந்தவரை நினைத்துப்பாடுவதாகும். இதனை இழப்புக்காக அல்லது இறந்தோருக்காக புலம்பிப்பாடும் பாடல் என்பர். துக்கத்தில் இருப்பவர்கள் மன அமைதிக் காகவும், ஆறுதலுக் காகவும் புலம்புகின்றனர். துயரத்தைத் தாங்கிக்கொள்ள இயலாத பெண்களே ஒப்பாரிப் பாடல்களைப் பாடுகின்றனர். தாய், தந்தை, கணவன், பிள்ளை, உற்றார், உறவினர் எவரேனும் இறந்துவிட்டால் ஒருவருடைய உள்ளத்தில் எழுகின்ற துன்ப உணர்வை வெளிக்காட்ட ஒப்பாரி பாடப்படுகிறது. தமிழில் ஒப்பாரியானது கையறு நிலை புலம்பல், இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப்பாட்டு, இழப்புப் பாடல், ஒப்பு பாடல், விண்ணாலம், அழுக்காட்சி முதலிய பெயர்களிலும் வருகின்றது. சென்னைப் பல்கலைக்கழக அகராதி ஒப்பாரியை ஒப்ப + ஆரி எனப் பிரித்து அழுகைப் பாட்டு என விளக்கம் தருகின்றது.

இறந்தவருக்காகவும் இழப்புக்காகவும் ஒப்பாரி பாடப் பட்டிருக்கின்றது. ஆனால், கண்டிராஜன் ஒப்பாரியைப் பாடிய புலவர் இழப்பினை நிகழ்காலத்தில் வைத்துப் பாடியுள்ளார். அதாவது, இழப்பு நிகழப்போவதனை இந்த ஒப்பாரிப்பாடல் முன்வைகின்றது. இப்பின்னணியில் எமக்குள் ஒரு வினா எழுகின்றது. அதாவது, கண்டிராசன் ஒப்பாரி பாடப்பட்டது ஆங்கிலேயரால் கண்டிநகர் கைப்பற் றப்படுவதற்கு முன்னரா? அல்லது கண்டி நகர் கைப்பற்றப் பட்டதற்குப் பின்னரா? என்பதுதான். இவ்வினா சிக்கலானது. இந்த கண்டிராஜன் ஒப்பாரி 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிப்பித்திருக்க வாய்ப்புள்ளது. எனினும், அக்காலத்தை அவ்வாறு அடையாளப் படுத்தவும் முடியாது. அவ்வாறுதான் அக்காலத்தில் பதிப்பித்திருந்தாலும் அதனைப் பாடிய புலவரின் காலத்தினைக் கணக்கிட முடியாதுள்ளது. அவ்வாறு கணக்கிட நினைத்தால் கண்டிராஜன் ஒப்பாரியில் வரும் சொற்கள், சொற்றொடர்களே ஓரளவான காலத்தினை அடையாளப்படுத்துவதற்கு உதவுகின்றது.

வேசி, கிழித்தெறிதல், அண்ணே, வங்குசமே, என்ன குறையோ ஐயா, அழிமதிக்கோ, சிங்களவர், பேய் பசாசு, இனங்கிப் போர் செய்தல், சோடித்தல், கதவு, பத்துமுலை, வேணுமடி, கள்ளக் கடுதாசியொன்று, (கடிதம்) உடுப்பு, வன்னியமார், எந்தனம்மான், மாமன்,

வண்ணான், சுறுக்காக, கெதியாக, வாடா, கெம்பீர முடன், பெட்டகத்தை, கீழ்சாதி, வேலிக்கு வைத்த முள்ளு காலுக்கு தைக்குமென்று, கள்ளப்பயல், கங்கிலியச் சீலை, (தூமச்சீலை) செருப்பு, என்னை அவளாரென்று எண்ணினாளோ நானறியேன், சின்னமுள்ள சிங்களத்தி, மானபங்கஞ் செய்தல், மாமியிதைக் கண்டவுடன் மனதுமிகக்கலங்கி, மருமகளே, அந்தழிவான், சேட்டை, கள்ளப்பயலை முதலிய சொற்கள் அண்மைக்கால எழுத்து மற்றும் பேச்சு வழக்கிலும் உள்ளது. ஆகவே, கண்டிராசனுடைய வரலாற்றினை வைத்துக்கொண்டு பாடப்பட்டிருக்கின்றது என்ற முடிவினைத் தருகின்றது.

கண்டிராஜன் ஒப்பாரி பெண்ணை வருத்துவதால் அந்த நாடே அழிந்துவிடும் என்ற கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டிருக்கின்றது. தமிழ் இலக்கியப் பரப்பில் சீதை, கண்ணகி, துரோபதை போன்றவர்கள் வருத்தப்பட்டதாலும், வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாலும் அந்த நாடே அழிந்தமையினை வரலாற்றுக் கதைகள் வழியே அறிகின்றோம். ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் தோல்விக்கும் கண்டி நகர் ஆங்கிலேயரால் கைப்பற்றப்படுவதற்கும் பூசணியாள் என்கின்ற பெண்ணின்மீது ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் கொண்ட காமுகப் பசிதான் காரணம் என்பதனை, இப்புலவர் உள்ளீடாக முன்வைக்கின்றார்.

எனினும், வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இடைச் செருகல் இடம்பெற்று கதைகொண்டு செல்லப் பட்டிருக்கின்றது. பொதுவாக ஒரு அரசன் தன்நிலையில் இருந்து தவறுவதால் ஏற்படும் அழிவினை இந்த ஒப்பாரி அடையாளப்படுத்துகின்றது.

## கண்டி வரலாற்றுச் சுருக்கம்

இலங்கை வரலாறு நீண்ட காலத்தினைக்கொண்டிருந்த போதும், இராவணன் காலத்தில் இருந்து அதன் தகவல்கல் வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பதிவாகின்றன. இதிஹாசக் கதையுடன் தொடர்புடைய இம்மன்னன் இலங்கையில் சிவலிங்க வணக்கத்தினை மேற்கொண்டிருக்கின்றான். இவனைத் தெடர்ந்து இலங்கையினை மன்னர்கள் பலர் ஆட்சி செய்திருக்கின்றனர். அந்த அடிப்படையில் இலங்கை வரலாற்றில் கண்டி இராச்சியம் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. கண்டி இராச்சியத்தின் அரச ஆட்சி மூன்று பிரிவாகக் காட்டப்படுகின்றது. அவை சங்கபோ வம்சம், தினஜார வம்சம், கண்டி நாயக்கர் வம்சம் என்பன.

### ஸ்ரீசங்கபோ வம்சம்

சேனாசம்மத விக்கிரமபாகு (கி.பி.1473 - 1511)
ஜயவீர அஸ்தானா (கி.பி.1511 - 1551)

| | |
|---|---|
| கரலியத்த பண்டார | *(கி.பி.1551 - 1581)* |
| தோனா கதரீனா (குசுமாசனதேவி) | *(கி.பி.1581 - 1590)* |

## தினஜார வம்சம்

| | |
|---|---|
| முதலாம் விமலதர்ம சூரியன் | *(கி.பி.1590 - 1604)* |
| சௌரத் | *(கி.பி.1604 - 1635)* |
| இரண்டாம் இராசசிங்கன் | *(கி.பி.1635 - 1687)* |
| இரண்டாம் விமலதர்ம சூரியன் | *(கி.பி.1687 - 1707* |
| வீரநரேந்திரசிங்கன் | *(கி.பி.1707 - 1739)* |

## கண்டி நாயக்கர் வம்சம்

| | |
|---|---|
| ஸ்ரீ விஜயராசசிங்கள் | *(கி.பி.1739 - 1747)* |
| கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கன் | *(கி.பி.1747 - 1782)* |
| ஸ்ரீ இராசராசசிங்கன் | *(கி.பி.1782 - 1798)* |
| ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் | *(கி.பி1798 - 1815)* |

இந்த வம்சத்தின் பின்னணியில் கண்டியை ஆண்ட கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன். (கி.பி 1798 - *1815*) அவனுடைய ஆட்சிப் பின்னணியைக் கொண்டு கண்டியராஜன் ஒப்பாரி பாடப்பட்டுள்ளது. இந்த ஒப்பாரி ஏன் பாடப்பட்டது?

ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் வரலாறு இவ் ஒப்பாரியில் எடுத்தாளப்படுகின்ற விதம்? வரலாற்றுடன் ஒப்பிடுகையில் அதன் திரிபு என்பன ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

## ஸ்ரீ விக்கிரமராசசிங்கன்

கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீ விக்கிரமராச சிங்கனின் பூர்வீகம் தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூராகும். இவன் தமிழ் பேசும் தெலுங்கர் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவன். தந்தை வேங்கடப்பெருமாள் இவர், விஜயநகரப் பேரரசின் மூன்றாம் வேங்கட மன்னன் பரம்பரையில் வந்தவர். தாயார் சுப்பம்மாள். இவர்களுக்கு இரு பெண்பிள்ளைகள். ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் மட்டுமே ஒரேயொரு ஆண் வாரிசு. பெற்றோர் சூட்டிய பெயர் கண்ணுச்சாமி. வேங்கடப் பெருமாள் இராமேஸ்வரத்துக்கு குடிபெயர்ந்து வந்து அங்குள்ள பெரிய கோவிலில் வேலை செய்தார். சிறிது காலத்தில் வேங்கடப் பெருமாள் இறந்ததும், இராமேஸ் வரத்தில் இருந்த தங்கை சுப்பம்மாளையும் கண்ணு சாமியையும் கண்டி பட்டத்துராணி கண்டிக்கு வரவழைத்தாள். கண்டியில் சிறுவர்களுக்கே உரிய துடிதுடிப்புடன் காணப்பட்ட கண்ணுசாமியை, மல்வத்த தேரரிடம் அனுப்பி சிங்களமும் தமிழும் பௌத்தமும் ஏனைய வித்தைகளையும் ராணி படிக்க வைத்தாள்.

ஏழு வயதில் கண்டிக்கு வந்த கண்ணுசாமி மகாராணிக்கு தத்துப்பிள்ளையாகி 17 வயதில் (1798) கண்டியின் அரசுரிமையை ஏற்றான். மன்னன் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் பதவியேற்று நீதி, நியாயம், தர்மம், அறச்சிந்தனைகளுடன் ஆட்சி நடத்தத் தொடங்கினான். இந்த நிலையினைக் குழப்புவதற்காக மன்னனுக்கு உதவியாக இருந்த அதிகாரிகள் திரைமறைவில் திட்டமிட்டு அரசியல் சதியில் ஈடுபட்டார்கள். இந்தச் சதிவலைகளிலிருந்து மன்னன் தன்னையும் நாட்டையும் காப்பாற்றிக்கொள்ள மிகுந்த எச்சரிக்கைகளுடன் நடந்துகொள்ள முனைந்தான். தனது எச்சரிக்கை உணர்வை மிகைப்படுத்தி வெளிப்படுத்தியதால் மன்னனுக்கு எதிராக அதிகாரிகள் திசை திரும்பினார்கள். மன்னன் ஸ்ரீ விக்கிரம ராசசிங்கனின் முதல் மந்திரியாகக் கடமையாற்றிய பிலிமத்தலாவ, எகலபொல ஆகியோரின் நடவடிக்கைகள் மன்னனை கொடுமைக்காரனாக உருவெடுக்கச் செய்தது.

## எகலபொல

ஸ்ரீ விஜயராசசிங்கன் கண்டியில் சிம்மாசனத்துக்கு வருகை தந்த பொழுது அதிகாரி எகலபொல என்பவனே மிகவும் முக்கியமான அதிகாரங்களை வைத்திருந்த பிரவுவாக விளங்கினான். முன்னைய மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் உடபலட்டவின்

திசாவையாகவும், மகா தேவாலயத்தின் பஸ்க நிலமேயாகவும் நியமனம் செய்யப்பட்டிருந்த நிலையில் அதிகாரி எகலபொல கண்டி மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குடைய பிரவுவாக விளங்கினான். கண்டிநாயக்க வம்சத்தின் அரசியல் பிரவேசம், அதிகாரி மீதான அதீத நம்பிக்கை, விசுவாசம், பொறுப்பு, ஆகியவற்றை நாயக்க ஆட்சியாளர் வைத்திருப் பதற்கும், பின்னணியாக விளங்கினான். இளவரசிகளை, பட்டத்து இராணிகளைத் தெரிவுசெய்து கொடுப்பதற்கும் அரசவையில் இடம்பெறுகின்ற திருமணங்களுக்கும் பொறுப்பாக இருந்தான். மட்டக்களப்பு, பாணம, நுகரகலாவிய, தம்பலகமுவ முதலிய கோறளைகளுக்கு ஆள்பதிப் பதவியையும் ஸ்ரீ விஜயராசசிங்கன் வழங்கி இருந்தான். எகலபொலவினால் கண்டிய அரசனுக்கு அதிக வருமானம் கிடைத்தது. இதற்காக கண்டிய அரசன் அவனுக்கு அதிக நிலபுலங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் அதிகாரியாக பிலிமத்தலாவே நரேந்திரசிங்கன் காலத்தில் நியமனம் செய்யப்பட்டான். எகலபொலவுக்கும் இவனுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. பின்னர். இரண்டாம் அதிகாரிப் பொறுப்பை சமணக் கொட்டிக்கு

விட்டுக்கொடுக்க வேண்டி இருந்தது. சமணக் கொட்டி எகலபொலவின் பரமவிரோதியாவான். இவர்களுடைய இவ்வாறான நியமனம் கண்டியரசனுக்கு மறைமுகமான சிக்கலை ஏற்படுத்தத்தொடங்கியது. கண்டி நாயக்க ஆட்சியினை அடியோடு ஒழிப்பதற்கு இவர்கள் திட்டம்போட்டு, அதனை நடைமுறைப்ப டுத்தினர். எகலபொல கண்டியின் கடைசி மன்னனான ஸ்ரீவிக்கிரமராசசிங்கனை ஆங்கிலேயரிடம் காட்டிக்கொடுத்து அந்த நகரம் ஆங்கிலேயரிடம் வீழ்வதற்குக் காரணமாக இருந்தான்.

பிலிமத்தலாவை

தளபதிகளில் ஒருவனாக இருந்துவந்த பிலிமத்தலாவ ஆரம்ப காலங்களில் ஸ்ரீ விக்கிரமராசசிங்கனின் நம்பிக்கைக்குரியவனாகச் செயற்பட்டான். பின்னர் மன்னனுக்கே துரோகம் செய்து அவனைக் கொல்வதற்கு மூன்று முறை முயன்று தவறுகின்றான். இவ்வாறான நிலையில் தலதாமாளிகையின் சூழலை மேலும் வனப்புமிக்கதாக்க எண்ணினான். அதற்காக மாளிகையைச் சுற்றி தெப்பக்குளம் கட்ட யோசனை கேட்டபோது அதனை மறுத்தது மட்டுமன்றி இந்த யோசனைக்கு எதிராக மக்களையும் தூண்டி விடுகின்றான். இவ்வாறான நிலையில் நான்காவது தடவையாகவும் மன்னனைக் கொல்லமுயற்சித்தபோது

பிலிமத்தலாவை பிடிபடுகின்றான். இந்த நிலையில்தான் இனியும் மன்னிப்பு இல்லை என்று 1811ஆம் ஆண்டு சிரச்சேதம் செய்யப்படுகின்றான்.

**கண்டி நாயக்கரும் கண்டிச் சிங்களவரும்**

கண்ணுச்சாமிக்கும் எகலபொலவுக்கும் உள்மோதல் அதிகரித்தது. எகலபொல ஆங்கிலேயர் உதவியுடன் மன்னனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்தான். இதையறிந்த மன்னன் எகலபொல குடும்பத்தை சிறையடைத்தான். இந்நிலையில் ஆங்கிலேயருடன் படை திரட்டிக்கொண்டு, எகலபொல கண்டி நோக்கி முன்னேறினான். இதனை ஸ்ரீ விக்ரமராசசிங்கன் அறிந்ததும் அவன் நிலை குலைந்தான். இதுதான் தக்கசமயம் என்று நேரம் பார்த்து காத்திருந்த அமைச்சர் பிலிமத்தலாவை மற்றும் படைத்தளபதி மொல்லிகொட உள்ளிட்டோர் மன்னருக்கு மதுவை ஊற்றிக் கொடுத்து அவரின் கோபத்தை மேலும் பன்மடங்காக்கினர். பிறகு எகலபொலயை பழிவாங்க ஒரு யோசனையையும் சொன்னார்கள். அந்த யோசனைதான் மன்னனின் அழிவுக்கு முக்கிய காரணமானது. பிலிமத்தலாவையின் யோசனையை ஏற்ற மன்னன் எகலபொலயின் பிள்ளைகள் நால்வரையும் பிடித்து வந்து அவர்களின் தலைகளை சிரச்சேதம் செய்து,

அந்தத் தலைகளை ஒரு இரும்பு உரலில் போட்டு அந்தப் பிள்ளைகளின் தாயான குமாரி ஹாமினியை கொண்டே இரும்பு உலக்கையால் இடிக்க வைத்தான். அத்தோடு தாயையையும் மேலும் அவளுடன் இருந்த பெண்கள் இருவரையும் கல்லுடன் கட்டி, நுவர வாவியில் தூக்கி எறிந்து, "ராஜதுரோகத்திற்கு இதுதான் தண்டனை" என்று கூறினான். இந்த நிகழ்வு 1814ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்றிருக்கின்றது. இந்தச் சம்பவம் மக்கள் மத்தியிலே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இவ்வாறன ஒரு பின்னணியில்தான் மக்கள் ஆங்கிலேயரை ஆதரித்ததாக அறியக் கிடைக்கின்றது.

ஆங்கிலேயர் கண்டியை நெருங்கியதும் ஸ்ரீ விக்கிரம ராசசிங்கன் தலைமறைவானான். ஒரு குகையில் தன் நான்கு மனைவிகளுடன் மறைந்திருந்த அவனை ஆங்கிலேயர் கைப்பற்றி, அவன் உயிரைக் காப்பாற்றித் "தண்ணீர் வேண்டுமா" எனக் கேட்டனர். "இல்லை மது வேண்டும்" என்றான். மது கொடுத்து பல்லக்கில் மரியாதையுடன் அழைத்துச் சென்று சிறையில் அடைத்தனர். கொழும்பில் வெள்ளைக் காரரின் அன்பான உபசரிப்பில் கவலை மறந்திருந்த மன்னனை 1816 ஜனவரி 24ஆம் திகதி கப்பல் மூலம் இந்தியாவுக்கு அனுப்பிவைத்தனர். நான்கு ராணிகள்,

தாயார், உறவினர்கள் என சுமார் 60 பேர் வரையில் கப்பலில் சென்றிருக்கின்றனர்.

சென்னைக்குச் சென்ற அவர்களை வேலூருக்கு அழைத்துச் சென்று, வேலூர் கோட்டையில் காவலில் வைக்கப்பட்டனர். இவன் கிட்டத்தட்ட 17 ஆண்டுகள் சிறையில் இருந்தான். இவனுடைய மறைவு 1832 ஜனவரி 30ஆம் திகதி இடம்பெறுகின்றது. தனது 17 வருட ஆட்சிக் காலத்தில் பிரிட்டிசார் கண்டியை நெருங்கவிடாது மக்கள் ஆதரவுடன் தடுத்தமை இம்மன்னனின் சாதனையாகும். கண்டி ஏரியையும் தலதாமாளிகையின் எண்கோண மண்டபத்தையும் இவனே கட்டினான். தன்னை கண்டி நகருக்கு மன்னனாக்கும்படி பலமுறை எகலபொல வேண்டினான். அவ்வேண்டு கோளைப் பொருட் படுத்தாமல் ஆங்கிலேயர் தமது நேரடி ஆட்சியைக் கண்டியில் ஏற்படுத்தினர்.

## கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களப்புக்கும் உள்ள தொடர்பு

மாருதசேனனின் மகன் எதிர்மனசிங்கன் மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி, கோரளை, தோப்பாவை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி ஆட்சி செய்தான். (கி.பி 1538 -1582) இவனுடைய மரணம் நிகழ்ந்த காலத்தில் முதலாம் இராசசிங்கன் (கி.பி 1581-1593)

சீதாவாக்கையில் அரசனாயிருந்தான். அவன் போர்த்துக்கேயரை கொழும்பிலிருந்து துரத்துவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்த காலமது. இரண்டாம் இராசசிங்கன் போர்த்துக்கேயருக்கு எதிராக ஒல்லாந்தருடன் ஒப்பந்தம் செய்திருந்தான். இந்த ஒப்பந்தத்தின்படி போருக்குப் பண உதவி மற்றும் படை உதவி செய்வதாகவும், அதற்குப் பதிலாக மட்டக்களப்பு, கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் கத்தோலிக்க குருமார் இருக்கக்கூடா தென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் ஒப்பந்தம் இடம் பெற்ற காலத்தில் மட்டக்களப்பு தவிர அனைத்துத் துறைமுகங்களும் ஒல்லாந்தர் வசமாயிருந்தன.

இவ்வாறான ஒப்பந்தம் இடம்பெற்ற பின்னர் ஒல்லாந்த ருக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் போர் இடம் பெறுகின்றது. (கி.பி16.05.1638) இந்த நிலையில் ஒல்லாந்தரால் எஞ்சியிருந்த மட்டக்களப்பும் கைப்பற்றப்படுகின்றது. இவ்வாறான நிலையில் இவர்களுக்கிடையே ஐரோப்பாவில் ஏற்பட்ட சமாதானம் காரணமாக மட்டக்களப்பு மீண்டும் போர்த்துக்கேயருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. இதனால் ஆத்திரம் கொண்ட இராசசிங்கன் ஒல்லாந்தர் மீது போர் தொடுத்து, ஒல்லாந்தத் தலைவன் ஒருவனின் தலையை வெட்டி யாழ்ப்பாணத்து ஒல்லாந்தத் தளபதிக்கு அனுப்பியிருக்கின்றான். ஆனால்,

ஒல்லாந்தர் இராசசிங்கனைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. மீண்டும் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் போர் இடம்பெறுகின்றது. இப்போரில் போர்த்துக்கேயர் மீண்டும் தோற்கடிக்கப்பட மட்டக்களப்பு ஒல்லாந்தர் வசமானது. இவ்வாறான நிலையில் மட்டக்களப்பும் ஏனைய நகரப் பிரதேசங்களையும் கி.பி 1656ஆம் ஆண்டு ஒல்லாந்தர் இராசசிங்கனுக்கு கையளிக்கின்றனர்.

கண்டி இராச்சியம் வலுப்பெற்ற காலத்திலிருந்து கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களப்பு வன்னியச் சிற்றரசர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டியரசனின் சபைக்கு கத்தோலிக்க குருவான சைமோவோ டி கொயிம்ரா எனும் பாதிரியாரும் ஆந்திரே டி சுசா எனும் போர்த்துக்கேய வீரனும் சென்றிருக்கின்றனர். அங்கு சென்ற பாதிரியார், கோவாவில் இருக்கும் போர்த்துக்கேய ஆளுனருக்கு ஒரு கடிதம் எழுதுகின்றார். அக்கடிதத்தில் (27.05.1546) “கண்டி மன்னனுடை சபையில் மட்டக்களப்பு மன்னனின் தூதுவர்களும் இருப்பதனை அவதானிக்க முடிந்தது என்று குறிப்பிட்டிருக்கின்றார். மேற்கூறிய பாதிரியார் கோவாவிற்குத் திரும்பிய பின் போர்த்துக்கல் நாட்டு மன்னனுக்கு (25.12.1546) ஒரு கடிதம் எழுதுகின்றார். அதில் “தாம் கண்டியிலிருந்து மட்டக்களப்புக்குச்

சென்றபோது, கண்டி மன்னனின் நண்பன் மட்டக்களப்பில் இருந்ததாகவும், அப்போது அம்மன்னனின் இராச்சியத்திற்குத் தான் சென்ற தாகவும் குறிப்பிடுகின்றார். மேலும், மட்டக்களப்பு மன்னனின் இராச்சியம் கண்டி மன்னனின் இராச்சியத்திற்கு அருகிலுள்ளதால் தாம் மட்டக்களப்பிலிருந்தே பிரயாணத்தைத் தொடங் கியதாகத் தெரிவிக்கின்றார்." இங்கு குறிப்பிடப்பட்ட மட்டக்களப்பு மன்னன், போடிகல் வெட்டில் குறிப்பிட ப்படும் காலிங்காகுடியினரின் முன்னோராக இருக்கலாம் என ஆய்வாரள் டி. சிவராம் குறிப்பி டுகின்றார்.

கண்டியை ஆட்சி செய்த விமலதர்மசூரியன் (கி.பி *1590 - 1604*) மட்டக்களப்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளான் என்பதனை கொக்கட்டிச்சோலைச் சிவன் கோவிலில் இடம்பெற்ற நிகழ்வொன்று தெளிவுபடுத்துகின்றது. திருப்படைக் களஞ்சியத்தில் கூறப்பட்டதன்படி நிகழ்வு இடம்பெறாமல் முரண்பாடு ஏற்பட்டதால் அங்கு, வன்னிமைகளுக்கும் வேளாளருக்கும் பிணக்கு ஏற்பட்டது. இந்தத் திருப்படை நிகழ்வில் இம்மன்னனும் கலந்து கொண்டிருக்கின்றான். இவ்வாறான நிலையில் அங்கு ஏற்பட்ட பிணக்குக்கான காரணம் பற்றி மன்னன் வினவியிருக்கின்றான். அப்போது வன்னியர்களும் செப்பேட்டை எடுத்து வாசித்துக் காட்டி, விதி

முறைகளை விளக்கியிருக்கின்றனர். அதனை செவிமடுத்த மன்னன் "கலிங்க ராசன் பண்டைக் காலத்தில் நடத்தியபடி சூரக வேட்டையாடி, நடத்திக் காட்டுங்கள்" என்று கூறுகின்றான். வன்னியர்களும் முரண்பாடு ஏற்படுத்திய வேளாளரை பண்டாரங் களைக் கொண்டு கட்டி அடிக்கின்றனர். பின்னர் வேளாளருக்கு மஞ்சள் நீர் தெளித்து முன்முதன்மை சொற்படி முட்டி கூறுமென கேட்கப்படுகின்றனர். வேளாளர், வரிசை முட்டி கூறும்போது அரசனமகிழ்ந்து மட்டக்களப்புத் திருப்பணி ஆறுக்கும் வெகுமதிகள் ஈகின்றான். முதன்மைச் சொற்படி – முன்னோர் சொன்னபடி வேளாளரையும் சிறைகளையும் நிறுத்தி உங்கள் பண்டுளியங்களைச் செய்யும்படி திட்டம் புரிகின்றான். அதற்குத் தவறினால் கொடிய தண்டனை கிடைக்குமெனவும் கட்டளை இட்டான் (தேரோட்டம் ப: 71-72) இங்கு மரபுவழிக் கடமைகள் வலியுறுத்தப்படுகின்றது. இம்மன்னன் இங்கு வந்த காலம் போர்த்துக்கேயர் காலம் என்பதால் பாதுகாப்பு பலமாக இருந்திருக்கும். பாதுகாப்புக்காக அம்பிலாந்துறை, பழுகாமம் முதலிய வன்னிமைகளில் இருந்த படைகள் பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இக்காலம் போர்த்துக்கேயர் பல ஆலயங்களையும் தமிழ்ப் படைகளையும் அழித்த காலம் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

பஸ்கோ முதலி கி.பி.1728 ஆம் ஆண்டு ஒல்லாந்த நாட்டிலிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டிருக் கின்றான். இவன் மதமாற்றுதல், லஞ்ச ஊழல் என்பவற்றிற்கு கள்ளக் கையொப்பமிடுதல், ஏமாற்றுதல் போன்ற அபாயகரமான வேலைகளைச் செய்துகொண்டிருந்தான். இந்த விடயம் சம்பந்தமாக கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுக்கு கி.பி 1747 - 1782) அறிவிக்கப்பட்டது. நிலமையினை விசாரித்து ஒல்லாந்தருக்குப் பின்வருமாறு கூறுகின்றான். "பஸ்கோ முதலியோ அவனுடைய சந்ததியினரோ அரச பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென்றும், இனி மட்டக்களப்பு முக்குலத்தோரைத் தவிர அன்னியர்கள் இராச அதிகாரிகளாக நியமிக்கப்படக்கூடாது எனவும் அரச பட்டயத்தில் எழுதுவித்தான்." மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க பஸ்கோ முதலி ஊர்காவற்துறை கோட்டையில் சிறைவைக் கப்பட்டான். இதன் பின்னனியில்தான் அறுமக்குட்டிப் போடியும் கந்தப்போடியும் 'போடி" நியமனம் பெற்றனர். (கி.பி 1766) கண்டிய மன்னனுக்கும் இவர்களுடைய முன்னோர்களுக்கும் இருந்த தொடர்பானது, இவர்களுடைய காலத்தில் மேலும் விரிவுபடுத்தப்படுகின்றது. கண்டி மன்னன் இராசாதி இராசசிங்கனுடைய முடிதரிப்பு விழாவுக்கு அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி இருவரோடும், முக்குலத்தவரின் நித்திய அதிபர்களும் கலந்து

கொண்டனர். அறுமக்குட்டிப்போடி வைர மாலையையும், கந்தப்போடி வராகன்மாலையையும் இராசாதிராச சிங்கனுக்கு (கீர்த்தி சிறிராசசிங்கன்) அணிந்தனர்.

ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் (கி.பி 1798 – 1815) ஆட்சிப்பீடம் ஏறுகின்றான். இவனுடைய இயற்பெயர் கண்ணுசாமி. இவன் கண்டியை ஆண்ட கடைசி மன்னனாவான். இவனுடைய காலத்தில் கரையோரப் பிரதேசங்கள் யாவையும் ஒல்லாந்தரிடமிருந்து பிரித்தானியர் கைப்பற்றுகின்றனர். எனினும், கண்டி அரசில் அவர்கள் தலையிடவில்லை. ஆங்கிலேயர் மட்டக்களப்பினைக் கைப்பற்ற வந்தபோது இங்குள்ள வன்னியப்படைகளுக்கும் அவர்களுக்கும் போர் இடம்பெற்றது. அதில் ஆங்கிலேயரை மூன்றுமாதம் வரையும் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் புளியந்தீவுப் பகுதியில் மட்டுப்படுத்தினர். பின்னர் வன்னியப் படைகளிடையே ஒத்துழைப்பு குறைய அவர்கள் பின்வாங்கி கண்டிக்குச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான ஒரு தொடர்பு கண்டி மன்னர்களுக்கும் மட்டக்களப்பு வன்னிமைகளுக்கும் இடையே இருந்திருக்கின்றது. கண்டி மன்னர்கள் மட்டக்களப்பு மக்களின் நலன்களில் அதிக அக்கறை

காட்டியிருக்கின்றான் என்பதனையும் கண்டிய மன்னர்கள் தெய்வத்தின் தன்மை வாய்ந்தவர்கள் என்பதனையும் இங்கு எழுந்த மாரியம்மன் காவியம், வீரபத்திர காவிய வாழிப்பாடல்கள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் முதலியன அடையாளப்படுத்து கின்றன.

## மாரியம்மன் காவியம்

ஈசனுடன் நாலுமறை வேதநூல் வாழி
இந்துமதி யொத்தளக வீசுபரி வாழி
வீசுபுக ஞூறுராச சிங்கனும் வாழி
விளை செந்நெல் மழைபெய்து நீடூழிவாழி
வாசமுள நாடுநக ரெங்கணும் வாழி
வரிசைபெறு சைவகுல மரபுமிக வாழி
ஆசுதமிழ் குற்றம் பொறுத்துநிதம் வாழி
அமிர்தபரி பூரணி வாழவாழியதே

## வீரபத்திரன் காவியம்

சீர்புனையு மூவருடன் மாலும்நான்முகனுஞ்
சிவவேத கதிரைவடி வேல்முருகர் வாழி
பார்கொண்ட முனிவோர்கள் ஆதிஅந்தணரும்
பரிவான ராசசிங்க மன்னனும் வாழி
கூர்மை செறிவேதத்தை ஓதுவோர் வாழி
குருவாழி சைவமும் குவலயமும் வாழி

கார்கொண்ட ரணவீர பத்திரரும் வாழி
காளிக்கா தேவியும் வாழவாழியவே

1. கும்பம் பிரித்ததன் பிற்பாடு
2. எட்டாஞ் சடங்கின் பூசை முடிவில்

என்று இந்த இரண்டு காவியப்பாடல்களும் மாரியம்மன் சடங்கில் பாடப்படுகின்றது. இந்தக் காவியங்களில் இறைவனுக்கு நிகரான இடம் மன்னனுக்கும் கொடுக்கப்பட்டிருகின்றமையானது, கண்டி மன்னர்களுடைய சேவையினை விபரிப்பதற்கு இனியொரு இடமில்லை என்பதனை உணர்த்தி நிற்பது போல் இருக்கின்றது.

## கண்டிராசன் ஒப்பாரி

### தேடல்

கண்டிராஜன் ஒப்பாரி பற்றிப் பலர் கதைப்பதனைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவர்களுடைய கதையில் "கண்டிராஜன் பிள்ளைகளை உரலில் போட்டு இடித்தான்" என்றுதான் சொல்வார்கள். ஆனால், அதனுடைய முழுமையான உள்ளீடு பற்றி அறியாத நிலையிலேயே இருந்து வந்தேன். இவ்வாறான நிலையில் சிலர் கூறுவார்கள் கண்டிராசன் கூத்து ஆடப்பட்டதாகவும், கண்டிராசன் ஒப்பாரிப் புத்தகம் இருப்பதாகவும் சிலர் எங்களிடம் இருந்தது அது,

எப்படியோ தொலைந்துவிட்டது என்றெல்லாம் கூறுவதனையும் கேள்விப்பட்டிருக்கின்றேன். என்னுடைய ஆய்வு எல்லை விரிவடைந்தபோது பல விடயங்களைத் தேடி பல கிராமங்களுக்குச் செல்வதுண்டு. அந்த நேரங்களில் கண்டிராசன் ஒப்பாரி பற்றியும் சிலரிடம் விசாரிப்பதுண்டு. விசாரிப்பவர்கள் எல்லாம் அது இருந்ததுதான் இப்போது இல்லையே என்றும், இன்னாரிடம் கேட்டால் சிலநேரம் அவரிடம் இருக்கும் என்று கூறுவார்கள். அவர்கள் சுட்டிய இடத்துக்குச் சென்றால் அந்தப் புத்தகம் இருக்காது. அல்லது தொலைந்திருக்கும் என்ற பதிலுடனே திரும்பி வருவேன். தேடல் தொடர்ந்தபோதுதான் எனது மாமனாருடைய அக்கா பரமாத்தை (வயது 86) கண்டிராசன் ஒப்பாரி பற்றிப் பாடினார். அந்தப் பாடல்கள் பாடிய முறை வியப்பினைத் தந்தது. பின்னர் அவரே கூறினார் அவருடைய தங்கை லெட்சுமிப்பிள்ளைக்கும் (வயது 78) இப்பாடல்கள் தெரியும் என்று. இருவரையும் அழைத்து பாடச் சொன்னேன் அவர்கள் பாடினார்கள். அதாவது, ஒருவர் பாடி முடியும் இடத்தில் இருந்து மற்றவர் பாடுவார். இவ்வாறு பாடிய பாடல்களை பதிவு செய்துகொண்டேன். எனினும், அந்தப் பாடல்கள் முழுமை தரவில்லை என்ற நிலையில் அதனைப் பெறுவதற்காகத் தேடல் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

## புத்தகம் பெறப்பட்டது

ஒரு நாள் பண்டாரியாவெளி சின்னத்தம்பிப் பரிகாரியாரை (வயது - 87) "மெரிக்கல் லீவுக்காக றிப்போட்" பெறுவதற்காகச் சென்றபோது சந்திக்கின்றேன். அவர் பெத்திப்போடியார் வைத்தியரின் பரம்பரையில் வந்த நாட்டு வைத்தியர். அவரிடம் "கண்டிராஜன் ஒப்பாரி இல்லையா" என்று கேட்டேன். அவர் எந்த மறுப்பும் இன்றி அப்புத்தகத்தினைக் கொண்டு தந்தார். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அந்தப் புத்தகம் மிகவும் பழமையானது. புத்தகத்தின் முன்பக்க உள்ள மூன்று தாள்களும் இல்லாமல் இருந்தது. (பக்கம் 1 தொடக்கம் 6 வரையுள்ள பக்கங்கள் புத்தகத்தில் இல்லை) புத்தகத்தின் தாள்கள் பழுதடைந்திருந்தன. (முறியும் நிலை) ஆனால், வாசிக்கத்தக்கதாக இருந்தது. ஒரு சில தாள்களின் அடிப்பக்க மூலைகளில் ஒரு சில எழுத்து சிதைவடைந்திருந்தன. ஆனால், பொருள் கொள்ளக் கூடியதாகவும் சொற்களைக் கண்டுகொள்ளக் கூடியதாகவும் இருந்தன. மொத்தத்தில் 7 தொடக்கம் 34 வரையுமுள்ள பக்கங்களுடன் இருந்தது. இப்பக்கங்களில் கண்டிராஜன் ஒப்பாரிப்பாடல்கள் 7 தொடக்கம் 27 வரையுள்ள பக்கங்களில் முழுமையாக இருந்தன. ஏனைய பக்கங்களில் மாந்திரீக முறைகள், சோதிட

முறைகள், ரேகை சாஸ்திரம் முதலிய விடயங்கள் இருந்தன. அவைகள் தவிக்கப்பட்டு கண்டிராஜன் ஒப்பாரி மட்டுமே ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இந்தப்புத்தகத்தின் நீளம் 9 செனரி மீற்றரும் அகலம் 5 செனரி மீற்றருமாகும்.

## பதிப்பிக்க வேண்டியதன் தேவை

கண்டிராஜன் ஒப்பாரி பற்றிய ஆய்வுக்கட்டுரை ஒன்றினை கிழக்குப் பல்கலைக்கழகத்தின், சுவாமி விபுலாநந்தா இசை நடனக் கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில், 2018ஆம் ஆண்டு சமர்ப்பித்தேன். இதற்குத் தலைவராக பேராசிரியர் சண்முகதாஸ் அவர்கள் இருந்தார். பார்வையாளர் பலருடன் கலாநிதி க.இரகுபரன் அவர்களும் இருந்தார். கட்டுரை சமர்ப்பித்ததன் பிற்பாடு கண்டிராசன் ஒப்பாரி பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது. பேராசிரியர் அவர்களும், இரகுபரன் அவர்களும் கருத்துக்களை முன்வைத்தனர். கருத்தரங்க முடிவில் கலாநிதி க.இரகுபரன் அவர்களைச் சந்தித்தேன். அவர்களிடம் கண்டிராசன் ஒப்பாரிப் பாடல் புத்தகம் குறையாக இருப்பது பற்றியும் பலரிடமும் பல பிரதேசங்களில் தேடியும் அதனைப் பெறமுடியாமல் போனமையி னையிட்டு கூறினேன். அந்தவேளை அவர் கூறினார், இந்தப்புத்தகம் பற்றி நானும் விசாரித்த அளவில்

யாரிடமும் இல்லை என்றுதான் கூறுகின்றார்கள். ஆகவே, உங்களிடம் இருப்பதனை முதலில் பதிப்பியுங்கள். இல்லையென்றால் இருப்பதும் இல்லாததாகிவிடும். குறைகள் இருப்பின் பின்னர் ஆய்வுலகம் பார்க்கட்டும் என்றார். இக்கருத்தினால் அதிகம் கவரப்பட்ட நான் இதனைப் பதிப்பிக்க முன்வருகின்றேன். முன்பக்கங்களில் உள்ள பாடல் வரிகள் சில இல்லாமல் இருக்கின்றன. அதனை வாய்மொழிப் பாடல்களால் இயன்றவரை ஈடுசெய்திருக்கின்றேன். ஆய்வுலகம் இதன் செம்மை கருதி முன்கொண்டு செல்வதற்கான வாய்ப்பு மேலும் ஏற்படுகின்றது.

**ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் மனைவி கனவு காணுதல்**

விடியற்காலைப் பொழுதில் கண்டிராஜன் மனைவி கண்ட கனவு பொல்லாதது. அன்பான கணவரே! உங்களைக் கட்டி கப்பலில் ஏற்றுகின்றார்கள். காலி, கண்டி, மாத்தறை, கொழும்பு எல்லா இடங்களும் அரசிழந்து இருக்கின்றது. ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றி ஆழ்வதாகக் கனவு கண்டேன். பார்த்தீபனே உனது வீரவாள் இருக்கும் மூலையில், கத்தா மரத்தில் உறையும் வௌவால்கள் வந்திருக்கவும் கனவு கண்டுள்ளேன். எமது கட்டிலருகே ஆங்கிலேயர் வருவது போன்றும், ஒட்டியானம், கிட்டிக்காப்பு, சிவிக்கி, அட்டியல், மோதிரம், பட்டுறவுக்கை, அழிந்து

போகவும் கனவு கண்டுள்ளேன். அழகான சீலை ஒன்று உரிந்து தீயில் விழுந்து எரிவதாகக் கனவுகண்டு திடுக்கிட்டு எழும்பியுள்ளேன் என்று ஸ்ரீ விக்கிரமராச சிங்கனிடம், தான் கண்ட தீய கனவுகள் பலவற்றைச் சொல்லுகின்றாள். விடியற்காலையில் காணுகின்ற கனவு பலிக்கும் என்பது இந்துசமய மரபாகும். இவ்வாறான கனவுகள் யாவும் துக்க செய்தியினைத் தருபவை எனப் பஞ்சாங்கமும் அடையாளப் படுத்துகின்றது. இங்கு ஒரு மனைவி கனவு பற்றிக் கூறினால் ஸ்ரீ விக்கிரமராசசிங்கனுக்கு நான்கு மனைவி இருந்தமையினைக் கண்டி வரலாறு காட்டுகின்றது.

### ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் நகரைக் காவல் செய்தல்

தனது மனைவி இவ்வாறான கனவு பற்றிச் சொன்னபோது ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் காவலர் களையும், படைகளையும் அழைத்து நகரினைக் காவல் செய்யப்புறப்படுகின்றான். நகரினுடைய பல்வேறு இடங்களைக் காவல் செய்து வருகின்றான். எந்தத் தடயங்களும் அகப்படவில்லை. ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் நகர்வலம் வருகின்ற வேளை யில் பூசனியாள், தன்னுடைய தோழிகளுடன் தோட்டத்தில் மலர் கொய்து கொண்டு நின்றுள்ளாள். இவ்வாறான நிலையில் மன்னன் வருவதனைக் கண்ட பூசனியாள் அங்கிருந்து மின்னல் வேகமாக ஓடி மறைகின்றாள்.

அந்த . இமைப்பொழுதில் அவள் அழகில் மயங்கி வீழ்கின்றான் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன். (பூசனியாள் வரலாறு) கண்டிய ராஜன் ஒப்பாரியில் ஆலம்பிள்ளையைச் (படைத் தளபதி) சந்திப்பதற்காக பூசனியாள் இருக்கும் வீட்டுக்குச் செல்கின்றான். அவனுடன் உரையாடிவிட்டு திரும்பும் வேளையில் புறக்கதவின் வழியே அவளைக் காண்கின்றான். அவளைப் பார்த்தமட்டிலே அவள் அழகில் மயங்கி விடுகின்றான் விக்கிரமன். இதனால் அவனுடைய மனைவியையும் மறந்து பூசனியாள் அழகு பற்றியே பலவாறு புலம்புகின்றான்.

"பூசனியாள் என்றொருத்தி புறக்கதவில் வந்து நின்றாள்
போகாத நாடுகளும் போய்ப்பார்த்து வந்தேனடி
பூசனியாள் தன் அழகைப் புத்தி கொண்டு நாள்தோறும்
எண்ணி எழுதிடினும் எழுத்தோலை தாங்காது.."

என்று அவளுடைய புறவுறுப்பு ஒவ்வொன்றையும் விபரித்தவனாக புத்திகெட்டவன்போல் தடம்புரள்கின்றான்.

## பெண்கள் இராசாவுக்குப் புத்தி கூறுதல்

ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் இவ்வாறு கூறக்கேட்ட அரசவைப் பெண்கள் ஐயையோ பெண்களை இவ்வாறு நினைப்பது தவறானது எனக் கதறி வரலாற்றில் இடம்பெற்ற செய்தியினைக் எடுத்துக் காட்டுகின்றனர்.

"சீதையினால் இலங்கை திசையழிந்து போனதுவும்
கண்ணகியால் மதுரை கட்டழிந்து போனதுவும்
துரோபதையால் குருவோடு சேராமல் போனதுவும்
பூசனியாள் கண்டியிடுபடுங்காண் என்றார்கள்"

என்று பூசனிமேல் ஆசை வையாதங்கோ ராசாவே, வைத்தால் கண்டிநகர் அழிந்துவிடும் என்று கூறுகின்றனர். கண்டி அழிந்தாலும், கடிநகர் அழிந்தாலும் நான் பூசனியைச் சேராமல் விடமாட்டேன் என்று அரசனுக்குரிய பண்பில் இருந்து தவறிப் பெண்களுக்கு கடியசொல்லால் பேசுவதாக காட்டப்படுகின்றது. நீங்கள் ஏதாவது தடைபேசினால் உங்களை வாளால் அரிந்து வன்கொடுமை செய்திடுவேன் என்று அவர்களை கோபக்கனல் பொங்க பேசி வெருட்டுகின்றான்.

## ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் மந்திரிக்கு கூறுதல்

இவ்வாறான நிலையில் ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் மந்திரியை அழைத்து அவன்மூலம் பூசனியாளை அழைத்து வருவதற்கான ஆலோசனை கேட்கின்றான். அதற்கு மந்திரி "பூசனிக்கு ஆசை வைத்தால் பிடிபடும் கண்டி என்றான்" இதனைக் கேட்டுக் கோபமுற்ற ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என் எதிரே நின்று மந்திரி எதிர் மொழிகள் பேசாதே. வேங்கைக்கு இரையாக வெட்டி உன்னைக் கொடுத்திடுவேன்" என்று கனல்

பறக்க கடிந்துரைக்கின்றான். இதனைக் கேட்ட மந்திரி, பயந்து கொண்டு அவனுக்கு யோசனை கூறுவதற்கு முன் வருகின்றான்.

## மந்திரி யோசனை கூறுதல்

தற்பொழுது ஆலம்பிள்ளை கண்டி நகருக்கே தளபதியாக இருக்கின்றான். அவனை வேறோர் தூர இடத்துக்குத் தளபதியாக அனுப்பிவிட்டால் பூசனியை இலகுவாகக் கொண்டு வந்திடுவேன் என்கின்றான். இதனைக் கேட்ட ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் சந்தோஷம் பொங்க “கள்ளக் கடதாசி யொன்று காரியமாய்த் தானெழுதித்தாறேன் ஆலம்பிள்ளை தனையழைத்து வாடா நீ” என்று கூறி மந்திரியை ஆலம்பிள்ளையிடம் அனுப்புகின்றான்.

## ஆலம்பிள்ளை தளபதியாக தூர இடத்துக்குச் செல்லுதல்

ஆலம்பிள்ளையிடம் சென்ற மந்திரி ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் உரைத்த மொழியைக் கூறுகின்றான். அதாவது ‘வத்துவாகையிலிருந்து’ (ஊவாப் பிர தேசம் என்பர்) கடதாசி ஒன்று வந்திருக்கிறது அந்தக் கடதாசியை (கடிதம்) வாசிப்பதற்காக உன்னை அழைத்து வரச் சொன்னார். அதன்படி அவனும் படைத்தளபதிக்குரிய ஆடையினைத் தரித்துக்

கொண்டு, இராசனுடைய வாசலுக்கு வருகின்றான். அவனைக் கண்ட இராசன் கட்டித்தழுவி மண்ட பத்துக்கு அழைத்துச் சென்று கடதாசியை வாசித்துக் காட்டுகின்றான். இந்தக் கடதாசியில் எழுதி இருப்பதன்படி கண்டியைக் கைப்பற்ற எதிரிகள் வருகின்றார்கள். ஆகவே, ஆலம்பிள்ளை நீ இப்பொழுது ஆறுமாத காலம் "வத்துவாகை" என்ற இடத்துக்குச் செல்ல வேண்டும். அங்கு எதிரிகளின் (ஆங்கிலேயரின்) நடமாட்டம் அதிகமாக உள்ளது. அவர்களை அடித்துத் துரத்தவேண்டும். படைத்தளபதியாகிய நீங்கள் படையினைத் திரட்டிக் கொண்டு அங்கு செல்லுங்கள் என்று கூறியதும், அதனை மனதார ஏற்றுக்கொண்டு அங்கு செல்வதற்குத் தயாரா கின்றான். வத்து வாகைக்குச் செல்லும் முன்னர் பூசனியாளுக்குப் புத்திகூறி செல்வோம். என்று அவள் இருக்கும் இடம்நோக்கிச் செல்கின்றான்.

### பூசனியாள் புலம்பல்

ஆலம்பிள்ளை வருகின்ற செய்தியினை அவளுடைய தாதியர்கள் (தோழியர்கள்) வந்து கூறுகின்றனர். வத்து வாகைக்குச் செல்கின்ற செய்தியினைக் கேட்டதும் பூசனியாள் நிலத்தில் விழுந்து அழுது புலம்புகின்றாள்.

"எந்தனம்மான் வருகிறது என்னென்ன வஞ்சனையோ
இதுபுதுமை நானறியேன் எந்தனருள் தோழியரே"

என்று கூறி அங்கு வந்த மாமனிடம் நடந்தவைகள் பற்றி வினவுகின்றாள். மன்னன் என்னை வத்துவாகைக்கு ஏவி விட்டான். நான் அங்கு செல்லுகின்றேன் நீங்கள் கவனமாக இருங்கள் என்றான்.

"கண்டிநகர் அழிந்தாலும் கால்மாறிப் போனாலும் முந்தன்
கற்புநெறி தவறாமலே நீ காப்பாற்றிக்கொள்ளுமம்மா"

என்று ஆலம்பிள்ளை மனங்கலங்கி வத்துவாகை நோக்கிச் செல்கின்றான். (அதாவது கண்டி மன்னன் பெண்களில் அதிக நாட்டம் உடையவன். அவனிடமிருந்து தப்பிக்கொள்ள வேண்டும் என்பதுபோல் இந்த சொற்றொடர் அமைகின்றது.) வத்துவாகை செல்லுமுன் தனது மனைவி மக்களிடம் சென்று விடைபெறுகின்றான். கண்டியிலிருந்து வத்து வாகைக்குச் செல்வதற்கு எட்டு நாள் செல்லும் என்று கூறப்படுகின்றது.

## மந்திரியை பூசனியாளிடம் அனுப்பி அவளை அழைத்துவரச் சொல்லுதல்

எட்டுநாள் கழிந்ததும் மந்திரியை அழைத்து, விரைவாக பூசனியைக் கொண்டுவரச் சொல்கின்றான்.

அப்போதும் மந்திரி மன்னனுக்குப் புத்திமதி கூறுகின்றான். அதாவது, பூசனியாள்மீது ஆசை வையாதே, அவ்வாறு நடக்குமாக இருந்தால், கண்டிநகர் அழியும் என்று சொல்லுகின்றான். எனினும், மன்னன் பிடிவாதத்தில் இருந்து நழுவாமல் இருப்பதனை உணர்ந்த மந்திரி பூசனியாளிடம் செல்கின்றான். மந்திரியைக்கண்ட பூசனியாள் அதிசயத்தோடு ஓடோடிவந்து, நலன் விசாரித்து வந்த விடயம் பற்றி வினவுகின்றாள். விக்கிரமராசசிங்கன் எனும் வேந்தன் இங்கு வந்த போது உன்மேல் காதல் கொண்டுள்ளான். உன்னழகில் மயங்கிய அரசனே உன்னை வரச்சொல்கின்றான் என்று கூறுகின்றான். அதற்குப் பூசனியாள் பதட்டப்படாமலே விடை கொடுக்கின்றாள்.

"அம்மான் வருமளவும் அரசர் மனம்பொறுத்துச்
செம்மையோடே யிருந்தால் சிந்தனை போலவேதான்
மணம்புரிந்திருப்போம் வாழ்ந்து இருப்போமென்று
சொல்லுமண்ணே ராசனுக்குத் துன்பம் மிகவராமல்"

இங்கு மந்திரியை அண்ணாகவே முறைகூறி அழைக்கின்றாள். அவ்வாறெனின் பூசனியாளுக்கும் மந்திரிக்கும் இடையே நெருங்கிய உறவு முறை இருப்பதனை அறிய முடிகின்றது. எனினும், எகலபொலவுடன் (ஆலம்பிள்ளை) இருக்கும்

பகைமையில் பிலிமத்தலாவ (மந்திரி) பூசனியாளை பழிவாங்க நினைப்பதும் குறிப்பிடத்தக்கதே.

பூசனியாள் சொன்னவற்றை மன்னனிடம் சொன்ன போது, மன்னன் பதட்டப்படுகின்றான். கண்டியில் பாதி தருகின்றேன், ஆணிமுத்து மாலைகளும், அழகுமணி மண்டபமும், தேவையான ஆபரணங்களும் தருகின்றேன் என்று சொல்லி அவளை அழைத்துவா என்கின்றான். இந்த விடயத்தினை பூசனியாளிடம் சொன்னதும் அவள் கண்டி மன்னனிடம் சொல்லுங்கள் அண்ணே! கண்டிநகர் வேண்டாம், கனத்த பணிவேண்டாம், அடியானோர் வார்த்தை ஒன்று அம்மானுக்கு உரைத்ததனால் அம்மான் இங்கு வரட்டு மென்று அசரனுக்குச் சொல்லுமண்ணே! என்று மந்திரியை அனுப்புகின்றாள். இங்கு நடந்தவற்றினை மந்திரி சொன்னதும், மன்னன் கிலேசமுறுகின்றான். கோபம் பொங்கி எழுகின்றது, மந்திரியே அவளிடம் சொல், மன்னன் ஒன்றும் செய்யவில்லை. உன்னைக் கண்டு கனகாலம் என்று, கைப்பிடியாய்க் கூட்டிவா என்கின்றான். இதனைப் பூசனியாளுக்கு மனவேதனையுடன் உரைக்கின்றான். பூசனியாளைப் பார்த்த மந்திரி உனது மனதுக்குச் சம்மதமென்றாள் மன்னனிடம் போவோம் வா என்று கூறுகின்றான். அதற்குப் பூசனியாள், "மதங்கொண்ட யானைக்கு கரும்பைக் கொடுத்தால் அது கடியாமல் தந்திடுமோ"?

மன்னனுக்கு அன்பாகச் சொல்லுங்கள், அம்மான் வந்ததும் இருவரும் மருவியிருப்போம் என்று. இதனைக் கேட்ட மன்னன் வேகமாக எழுந்து பெட்டகம் ஒன்றெடுத்துப் பட்டுவகைகளும் பலதுயில்களும் அடுக்கி, ஆபரணமெல்லாம் அதில் வைத்து மாதுக்கு இதைத் தரித்து பூசனியை இங்கு அழைத்துவா என்று மந்திரியை மீண்டும் அனுப்புகின்றான். பெட்டகத்தைக் கொண்டு கொடுத்ததும் பூசனியாள் திறந்து பார்க்கின்றாள். அதற்குள் இருந்த பொருட்களைக் கண்ட அவள் அதிர்ச்சியுற்று கீழே விழுந்து புரண்டு அழுகின்றாள். நான் சொன்ன வாத்தை ஒன்றும் இலங்கை மன்னனுக்கு புரியவில்லையா? அவனுக்கு அற்பபுத்தியா? வேலிக்கு வைத்த முள்ளு காலுக்குக் குத்துவதா? என்று பலவாறு சொல்லிப் புலம்புகின்றாள். பின்னர் சினந்தெழுந்து பொட்ட கத்துக்குள் கட்டோடு புல்லுவைத்தாள், (வாருகற்புல்) கங்கிலியச் சீலை வைத்தாள், (தூமச் சீலை) மந்திரியின் கையிற்கொடுத்து மன்னனுக்குச் சொல்லும் அண்ணே! செருப்பால் அடிப்பேன் என்று அனுப்புகின்றாள். மந்திரி கொண்டுவந்த பொட்டகத்தைப் பார்த்த மன்னன் கண்ணிரெண்டும் பொறிபறக்க நின்றான். அவளின் நாக்கை இழுத்தறுத்து நாய்க்குப் போடுவேன், காகம் கரையாது கன்றுமுலை தொட்டுண்ணாது, நாகம் படம்

விரித்து நன்றாய் ஆடாது என்று பலவாறு சொல்லி கோபங்கொண்டு, அந்த வேசியைக் கொண்டு வருவதற்காகப் புறப்படுங்கள் என்கின்றான். இதனைக் கேட்டிருந்த திசைமார்கள் (தாதியர்கள்) வேகமாகப் பூசனியாளிடம் வந்து அங்கு நடந்த விடயம் பற்றிக் கூறுகின்றனர்.

## பூசனியாள் இரவோடு இரவாக ஆலம்பிள்ளை இருக்கும் இடம் செல்லுதல்

பூசனியாள் அந்த மழைக்கால இருட்டிலும் தனது மாமியிடம் சென்று, நடந்தவைகளைக் கூறுகின்றாள். மனம் கலங்கிய மாமி "நீ இங்கு இருக்க வேண்டாம் விடிவதற்குள் உன்னுடைய மாமனிடம் செல் என்று" அனுப்புகின்றாள். அதற்கு ஏற்ப தோழியருடனும், வன்னியமார் மற்றும் படைகள் சூழவும், தங்கப் பல்லக்கில் ஏறி மிகவும் விரைவாகச் செல்கின்றாள். காடு கரம்பை கடந்து செல்லும்போது யானை ஒன்று வருவதனைக் கண்டு எல்லோரும் பயந்து ஓடுகின்றனர். பூசனியாள் மட்டும் அதிக பயத்துடன் எதிர்த்து நின்றாள்.

"கண்டிக்கு நானும் கனகாலம் வந்தென்றால்
ஆணேறே குஞ்சரமே ஆயிழையாள் சொல்லுகிறேன்
என்னை ஒருவனுக்கு என்தாயும் பெற்றதென்றால்
பத்தினி என்றென்னைப் பலபேரும் சொல்கிறார்கள்

என்தாயே ஆணேறே குஞ்சரமே எந்தனை நீ
கொல்லாதே இந்நேரம் கொல்லாதே என்றழுதாள்"

இவ்வாறான நிலையில் யானை விலகிச் செல்கின்றது. அவர்கள் தொடர்ந்து செல்லும்போது கங்கை வழிமறிக் கின்றது. அந்தக் கங்கையால் அபாயமாக நீர் பாய்கின்றது. அப்போது கங்கையிடமும் "கங்கையே தங்கையே அன்றொருநாள் அரிச்சந்திரனும் சந்திரமதியும் காசிநகருக்குக் கடனிறுக்கச் செல்கையிலே அக்கினியாறு வழிமறிக்கின்றது. அந்த அக்கினியாற்றை அவர்கள் வேண்டிக்கொள்ள அந்த ஆறு வழிவிட்டதைப் போன்று எனக்கும் வழிவிடுவாயாக என்று இரந்து கேட்கின்றாள். இவ்வாறான நிலையில் ஆறு திட்டியாகி வழிவிடுகின்றது. யாவரும் கடந்து கரையின் மறுபக்கத்தை அடைய மீண்டும் ஆறு பெருக்கெடுத்துப் பாய்ந்து செல்கின்றது."

## பூசனியாள் கங்கையில் விழுந்து இறத்தல்

இவர்கள் யாவரும் ஆற்றைக் கடந்து ஆலம்பிள்ளை இருக்கும் இடத்துக்கு அண்மையில் செல்கின்றனர். இவர்களைக் கண்ட ஆலம்பிள்ளையின் படையணி, மாற்றான் படையோ என்று நினைத்து போருக்குத் தயாராகின்றார்கள். இதனைக் கண்ட பூசனியாளும் ஏனையோரும் நடுங்கித் தடுமாறுகின்றனர்.

அந்தவேளை தென்றல் வீச ஆலம்பிள்ளை பூசனியாளின் மணத்தை உணர்கின்றான். வந்திருப்பது தனது மருமகள் என்று அவ்விடம் ஓடிவருகின்றான். மனச் சந்தோசமும் கொண்டாலும், பூசனியாளின் பதட்ட நிலையினை உணர்கின்றான். இந்த வேளையில் இங்கு நீங்கள் வந்ததன் காரணம் என்னவென்று வினவுகின்றான். அப்பொழுது பூசனியாள் நடந்த விடயத்தினைக் கூறுகின்றாள். இதனைக்கேட்டதும் ஆலம்பிள்ளை கோபமுற்று மன்னனைப் பலவாறு திட்டித்தீர்த்து, பூசனியாளையும் தோழி யரையும் ஏனையோரையும் விடுதிக்கு அனுப்பித் தூங்கச் செய்கின்றான். எல்லோரும் நித்திரைக்குப் போன பின்னர் பூசனியாள் மனம் கலங்கி பலவாறு யோசனை செய்து கங்கையிலே வீழ்ந்து உயிரை விடுகின்றாள்.

தோழியர், பூசனியாளைக் காணாமல் பதறினார்கள் பல இடங்களில் தேடினார்கள். அவளை எங்குமே காணாமையினையிட்டு மனம்நொந்து நின்றபோது அவளுடைய காலடியினை காணுகின்றார்கள். அந்த காலடியினைத் தொடர்ந்து சென்றபோது, அவள் ஆற்றில் விழுந்து இறந்தமை உறுதியாகின்றது. அவர்கள் புலம்பி அழுது இந்தவிடயம் பற்றி ஆலம்பிள்ளையிடம் முறையிடுகின்றார்கள்.

ஆலம்பிள்ளை மனம் தடுமாறி கலங்கி அவளைப் பற்றிப் பலவாறு சொல்லி அழுகின்றான். ஏழு பிள்ளைப்பெற்று நான் வளர்த்தேன். மூத்த மகனை உந்தனக்கு முடிப்பதற்கு ஆசைகொண்டேன் என்று தேம்பித் தேம்பி அழுது, மாற்றானை வரவழைத்து இந்தக் கண்டிநகரைப் பிடித்துக் கொடுப்போன் என்று மனம் வெதும்புகின்றான்.

## பூசனியாள் கண்டி நகரில் இல்லை என்பதனை அறிதல்

பொழுது விடிந்ததும் பூசனியைப் பிடித்துக்கொண்டு வாருங்கள் என்று படைகளை அனுப்புகின்றான். அவர்கள் பூசனி இருந்த பொன்னலைச்சாலை, ஏழுசுற்றுக் கோட்டை முதலிய இடங்களைத் தேடிப் பார்த்தார்கள் அவளைக் காணவில்லை என்ற செய்தியினை மன்னனுக்குச் சொல்லுகின்றனர். அதிக கோபங் கொண்ட மன்னன், தளபதிகளை ஆலம்பிள்ளையின் மனைவி மங்கிலியத்திடம் அனுப்பி விசாரிக்கின்றனர். அதற்கு மங்கிலியம் சொல்லுகின்றாள், ஆலம்பிள்ளையுடன் பூசனியாள் வருகின்றாளாம், மன்னனைக் கோபிக்கவேண்டாமாம் என்று சொல்லுங்கள் என்று. இந்தச் செய்தியினை தளபதிகள் சொன்னதைக் கேட்டதும், மன்னன் கோபக்கனல் பொங்க மங்கிலியம் இருக்கும்

வீட்டுக்குச் சென்று, மங்கிலியத்தையும் மக்களையும் இழுத்துவருகின்றான்.

## உரலில் போட்டு இடித்தல்

ஸ்ரீவிக்கிரமராசசிங்கன் மங்கிலியத்தையும், ஏழுபிள்ளை களையும் இழுத்து வந்து பிள்ளைகளின் தலையை வெட்டி உரலில் போட்டு தாயை இடிக்கச் செய்து, அதனால் வந்த இரத்தமதைக் குடித்து இரத்தவெறியில் நின்று, மங்கிலியத்தை தனது வாளால் இரண்டு துண்டாக வெட்டி ஆற்றில் எறிகின்றான். அப்போது, "பூசனி எங்கேயடா அந்தப் பொல்லாத பூதத்தைக் கொண்டுவாடா மந்திரியே, அவளைக் கீறிக் காயவைப்பேன்." என்று சத்தமிடுகின்றான். தளபதிகளும் மந்திரியும் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். இவ்வாறான நெருக்கிடையான தருணத்தில் ஆலம்பிள்ளை வருகின்ற செய்தி மன்ன னுடைய காதுக்கு எட்டுகின்றது. அப்போது மன்னன் விரைவாக ஓடி ஒழிகின்றான். கண்டி வரலாற்றுப்படி எகலபொல ஆங்கிலேயரிடம் சரணடைந்தமையினை அறிந்த மன்னன் அவர்களைச் சிறையில் அடைக்கின் றான். கண்டிராஜ்யத்துக்கு எதிராக ஆங்கிலேயர் போர்ப் பிரகடனம் செய்தபோது, எகலபொலயின் குடும்பம் ராணிமாளிகைக்குக் கொண்டுவரப்பட்டு அந்த இடத்தில் நான்கு பிள்ளைகளும் சிரச்சேதம்

செய்யப்படுகின்றனர். இறுதியாக குமாரிஹாமினியும் அவளுடன் இருந்த இரண்டு பெண்களும் கைகால் கட்டப்பட்டு, இடுப்பில் பாரமான ஒரு கல்லைக் கட்டி, நுவரவாவியில் தூக்கி எறியப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். இந்தக் கொலை இவ்வாறு நடப்பதற்கு மொல்லிக்கொடதான் ஆலோசனை கூறியதாக அறியக்கிடைக்கின்றது.

## ஸ்ரீ விக்கிரமராசசிங்கனைப் பிடித்தல்

ஆங்கிலேயர் பல இடங்களில் தேடியும் மன்னனைக் கண்டு பிடிக்கவில்லை. இவ்வாறான நிலையில்தான் கோட்டைக்குள் ஒழித்திருந்த விக்கிரமசிங்கனை ஆலம் பிள்ளை பிடித்திழுத்து வந்து அடித்தான். இவன் உயிருக்குப் போராடி இருக்கும் நேரத்தில் ஆங்கிலேயர் அவனைக் காப்பாற்றி சிறையில் அடைக்கின்றனர். மன்னனைப் பிடித்தது எகனிலிகொடை என்றும் அப்போது, மன்னனுடன் நான்கு இராணிகள் இருந்துள்ளனர் என்றும் வரலாறு காட்டுகின்றது. இந்த நேரத்தில் மன்னன் மிகமோசமாகத் தாக்கப்பட்டதோடு ராணிகள் அரை நிர்வாணமாக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறான தருனத்தில் ஆங்கிலேயர் அவனைக் காப்பாற்றி வேலூர்ச் சிறையில் அடைக்கின்றனர்.

## சூக்குமமான கப்பல் செய்தல்

ஸ்ரீ விக்கிரமராசசிங்கனை ஆலம்பிள்ளை பலவாறு தாக்குகின்றான். அந்தநேரம் ஆங்கிலேயர் அவனைக் காப்பாற்றுகின்றனர். நம் முன்னே ஸ்ரீ விக்கிரமசிங்கனை ஆலம்பிள்ளை கொடுமையானமுறையில் அடித்தான், இவனை வைத்திருந்தால் நமக்கு ஆபத்து வரலாம் என்று ஆங்கிலேயர் சூட்சமுள்ள கப்பலொன்று செய்து, ஆலம்பிள்ளையை அதில் ஏற்றி நடுக்கடலில் செல்லும் போது மூழ்கவைக்கின்றனர். அப்போது அவன் இறந்து போகின்றான் என்று அதன் இறுதிப்பகுதி முடிவடைகின்றது.

எகலபொல கண்டிக்கு மன்னனாக வேண்டும் என்ற நப்பாசையில் மன்னனைக் காட்டிக் கொடுத்தான். கடைசியில் அது நிறைவேறவில்லை. இறுதியாக கொழும்பில் மகா பிரதானியாக இருக்கும் ஜோன் டொய்லிக்குச் சமமாகத் தன்னை நடத்தும்படியும் கேட்டுக்கொண்டான். அதற்கும் பிரட்றிக்நோர்த் சம்மதம் தெரிவிக்கவில்லை. மனைவியை இழந்த எகலபொல, கணவனை இழந்திருந்த மீகஸ்தென்ன திசாவையின் மனைவியைத் தனது மனைவியாக ஏற்றுக் கொண்டான். அதற்கான செலவைத் தரும்படி கேட்டதற்கும் அதனையும் தட்டிக்கழித்தார் பிறட்றிக் நோர்த். இவ்வாறாக அவன் எதிர்பார்த்த எதுவும்

அவனுக்கு கைகூடாமல் செல்வதனையிட்டு மனம் வருந்தினான்.

## கண்டி மன்னனுடைய இறுதி உரை

கண்டி மக்களுக்கு நான் எவ்வளவோ நன்மைகள் செய்தேன். அவர்கள் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அதற்காக அவர்களை குறை கூறமாட்டேன். என்ன செய்வது? நான் பெரிதும் நம்பியிருந்த மந்திரிகளும் சேனாதிபதிகளும்கூட இருந்தே குழிபறித்து விட்டார்கள். நான் மன்னனானது முதல் மூத்த அதிகாரி பிலிமத்தலாவ தனது பதவி ஆசையை நிறைவேற்றிக்கொள்ள என்னைப் பகடைக்காயாகப் பயன்படுத்தினான். அவன் துரோக எண்ணங்களை நீண்டகாலம் நான் புரிந்து கொள்ளவில்லை. அவனைப் புரிந்துகொண்டபின் நிதானமாக எச்சரித்தேன். அதனையும் மீறி அவன் செயற்பட்டபோது அவனை விசாரணைக்குழு முன் நிறுத்தி விசாரித்து மன்னிப்பு வழங்கினேன். எனக்கு விசுவாசமான சிலரைப் பற்றி பிலிமத்தலாவ என்னிடம் தவறாகக் கூறி, அவர்கள் மீது எனக்குக் கோபம் வரச்செய்தான். கண்டி ஏரியை அமைத்து, தெருக்கள் வசதிகளைப் பெருக்கி, கண்டி நகரை அழகுபடுத்த நான் எத்தனித்தபோது, பிலிமத்தலாவ அதற்கு எதிராக பிரச்சாரம் செய்து, மக்களை தூண்டிவிட்டான். அவனுக்குப் பின்னர் உயர் பதவி கொடுத்து

வைத்திருந்த எகலபொல என்பவனும், என் துரோகிகளுடன் சேர்ந்துவிட்டான். கடைசி நேரத்தில் மொல்லிகொட என்பவனும் சேர்ந்து, நம்பிக்கைத் துரோகம் செய்தது, உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர்களிடம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்களிடம் நன்றி, விசுவாசத்தை எதிர்பார்க்க வேண்டாம். என்னிடம் இருந்த சில அதிகாரிகள் வெள்ளைக்காரர்களுடன் கொண்ட சகவாசத்தால் மதுவுக்கு அடிமையானார்கள். எனக்கும் மதுப்பழக்கத்தை பழக்கினார்கள். என்னை சிலர் அழிக்க முயல்வது தெரிந்ததும் நித்திரை வராமல் மதுவை நாடி மதியிழந்து இன்று நாட்டையும் இழந்தேன். எனக்கு உயிர்பிச்சை அழித்தமைக்கு நன்றிக் கடனாக நான் உங்களை இப்படி எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதனால்தான் என் எண்ணங்களை கொட்டினேன். நன்றி! வணக்கம்! சென்று வருகின்றேன்"

கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பிரிட்டிஷ் அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டு பின்னர், தெல்தெனியாவிலிருந்து கொழும்புக்குப் புறப்பட முன் சுற்றி நின்ற ஆங்கில அதிகாரிகளான ஜோன்டி ஒய்லி, குக் ஆகியோர்களைப் பார்த்து மேற்கண்டாவாறு கூறியிருந்தான். இந்தத் தகவல் 1903ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 10ஆம் திகதி

வெளிவந்த இலஸ் ரெட்டட் லண்டன் நியூஸ் என்ற பத்திரிகையில் "மன்னன் பிடிபட்ட கதை" என்ற கட்டுரையில் வருகிறது. (இணையம்)

## முடிவுரை

கண்டி வரலாற்றுக்கும் இந்த ஒப்பாரிக்கும் உள்ள தொடர்பு யாதெனின் கண்டியையும் மன்னனையும் காட்டிக் கொடுத்தது, மனைவி மக்கள் சிரச்சேதம் செய்யப்பட்டது என்ற நிலையில்தான் வருகின்றது. ஆனால், பூசனியாள் பற்றி வருகின்ற செய்திக்கு வரலாறு இடம்கொடுப்பதாக இல்லை ஸ்ரீ விக்கிரம ராசசிங்கனை ஆங்கிலேயர் சிறைப் பிடிக்கின்ற போது நான்கு மனைவிகளுடன் இருந்திருக்கின்றான். அவ்வாறாயின் இவனுக்கு பெண்கள் மீது அதிக நாட்டம் இருந்திருப்பது தெளிவாகத் தெரிகின்றது. அதுமட்டுமன்றி கடைசிகாலத்தில் மதுவுக்கும் அடிமையாகின்றான். இந்தப் பின்னணியில் அவதானித்தால் பூசனியாள் என்ற பெயருடன் வருகின்ற பெண்மீதும் இவனுக்கு அதிக நாட்டம் இருந்திருக்கும். இதனை அறிந்த அவள் மன்னனுடைய அதீத காதலுக்கு இடம் கொடுக்க மறுத்திருப்பாள். அதனால் கோபங்கொண்ட மன்னன் தனது அரச நிலையில் இருந்து தவறுவதற்கு அதிகமான வாய்ப்பு இருக்கின்றது. இந்தப்

பின்னணியை வைத்து எகலபொல எனும் ஆலம்பிள்ளையின் மருமகளாக பூசனியைப் பிரதானமாகக்கொண்டு, கண்டிராஜன் ஒப்பாரி பாடப்பட்டிருக்கின்றது. இந்த ஒப்பாரியின் உட்பொருள் பல விழுமிய கருத்துக்களை முன்வைக்கின்றது.

1. பெண்கள் மீது அளவுகடந்த காம உணர்ச்சி கொண்டால் அந்த நாடே அழியும் என்பதை அடையாளப்படுத்தல்.
2. அரசன் மக்களைக் காப்பாற்றும் நிலையில் இருந்து தவறினால் அந்த நாடேகெட்டுப்போகும் என்பதனை வலியுறுத்தல்.
3. தளபதிகளிடையே ஒற்றுமை இருந்தால் மட்டுமே அரசு நிலைக்கும் என்பதனை வலியுறுத்தல்.
4. அரசன் முன்னோர் மொழிந்தவைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டுதல்.
5. எதிரி எப்போதும் பலசாலியை வீழ்த்துவதற்குப் பல்வேறு உபாயங்களைப் கையாழ்வான் என்பதனை அறிந்து செயற்படல்.
6. பின்கதவால் எதனையும் பெறுவது அல்லது பெற நினைப்பது ஆபத்தை உண்டாக்கும் என்பதனை வலியுறுத்தல்.
7. பேராசைப்படுதல், ஒருவரை காட்டிக்கொடுத்து வஞ்சிப்பது யாவும் சமூகக்குற்றம் என்பதோடு, அவை நிறைவேறாத ஆசைகளாக அமையும்

என்பது, ஆலம் பிள்ளை வாயிலாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

8. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கற்பின் வலிமையினை உறுதிப்படுத்தல்.

இந்த வரலாறு, கிளைக் கதைகளையும் இடைச் செருகலையும் கொண்டு சில இடங்கள் சமூகப்பண்பாட்டுத் தளத்தில் மிகைப்படுத்தப்பட்டுக் காட்டப்படுகின்றது.

இந்தப் ஆய்வுப் பதிப்புப் புத்தகம் வெளிவருவதற்கு கண்டிராஜன் ஒப்பாரிப் புத்தகத்தினைத் தந்துதவிய கிராமிய வைத்தியர் சின்னத்தம்பி அவர்களுக்கும், கண்டிராசன் ஒப்பாரிப் பாடலை வாய்மொழி மூலமாகப் பாடிய பரமாத்தை, இறைபதமடைந்த லெட்சுமிப் பிள்ளை மற்றும் இந்த பதிப்பு முயற்சி புத்தகமாக வரவேண்டும் என்பதில் கரிசனைகாட்டி இதற்கான அணிந்துரையினையும் எழுதிய மதிப்புக்குரிய கலாநிதி.க.இரகுபரன் அவர்களுக்கும், இந்த முயற்சிக்கு கரங்கொடுக்கும் எனது மனைவி மக்களுக்கும் என்றும் நன்றிகள் உரித்தாகட்டும். இவற்றுக்கு மேலாக இந்தப் பாடலைப்பாடிய புலவருக்கும் அதனைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

# கண்டிராஜன் ஒப்பாரிப் பாடல்

(வாய்மொழியாக பதியப்பட்ட பாடல்)

திருவளர்வு மாலை மார்பா என் சிங்கமகராசாவே
கருவளரும் இங்கிலீசர் உம்மைக்கட்டவும் கனவுகண்டேனே
வாளுக்கு அரசே மன்னா மதுரைக்கு ராசாவே
போருக்கு நீயே புறங்காட்டாப் பூபதியே
நீயாளும் செல்வமெல்லாம் அப்பொல்லாத இங்கிலீசர்
தாராளமாக வந்து ஊராளக் கண்டேனே
தென்னிலங்கை மன்னவரே வீரமுள்ள சிங்கனே உன்
மன்னரெத்தின முடிதரித்து மண்ணில் விழக் கண்டேனே
என்ன குறையோ ஐயா என் மன்னவனே உம்முடைய
பொன்னிலங்கை கண்டி பிடிபடவும் கண்டேனே
தோற்காத சிங்கமே எங்கள் சூரியகுல வங்குசமே
நீர் படையில் தோற்றுவர நிச்சயமாய்க் கண்டேனே
என்ன குறையோ ஐயா என் மன்னவனே உம்முடைய
மன்னரெத்தின முடிதரித்து மன்னில் விழக் கண்டேனே
நீர்படுக்கும் மெத்தையெல்லாம் எம் விக்கிரமசிங்கராசாவே
நாய் படுத்து உறங்கவும் நான் கனவு கண்டேனே
நீ நேசமுடன் வாங்கித்தந்த அந்த நெருந்திப் பூச்சேலையது
மோசமதாய்த் தீப்பிடித்து முழுதும் பற்றக் கண்டேனே
நீ வாள்சாத்தும் மூலையெல்லாம் எம்விக்கிரமசிங்கராசாவே
வவ்வால் உறையவும் நான் கனவு கண்டேனே

இவ்விதமாய்ச் சொற்பனங்கள் கண்டேனே மன்னவரே
என்ன அழிமதிக்கோ ஏதுக்கோ நான் அறியேன்
எனது கனா முழுதும் என் மன்னவனே சொல்லி வந்தேன்
தனது என்னம் எப்படியோ அப்படியே நீ அறியும்
திக்கற்ற பேர்களுக்கு செல்வக்குடையோனே
கண்ணல் மொழி வாசகரே எம் கண்டிக்கு ராசாவே
வண்ணரெத்தின முடி தரிந்து மண்ணில் விழக் கண்டேனே
என்ன குறையோ ஐயா எம் மன்னவரே உம்முடைய
பொன்னிலங்கை கண்டி பிடிபடவும் கண்டேனே
தோற்காத சிங்கமே நீ எங்கள் சூரியகுல வம்சமே
நீர்படையில் தோற்றுவர நிச்சயமாய்க் கண்டேனே
வங்கர் குலங்கர்களும் மற்றும் வடுகர் மாறாட்டருடன்
சிங்களவர் அடிபணியும் தேசத்து இலங்கை மன்னா
சுந்தரஞ்சேர் ராச மன்னா நான் சொல்வதைக்கேளுமையா
உம்முடைய பொன்னிலங்கை கண்டி பிடிபடவும் கண்டேனே
இவ்விதமாய்ச்சொற்பணங்கள்நான்கண்டேனே மன்னவரே
என்ன குறையோ ஏதுக்கோ நான் அறியேன்
சொன்ன மொழிகலெல்லாம் கேட்டு எப்போது
இவ்விதமாய்ச் சொற்பணங்கள் கண்டேனே மன்னவரே
இவ்வாத்தை கேட்டவுடன் எங்கள் விக்கிரமசிங்கன் அவன்
செவ்வாய்ப் புலியதுபோல் சினந்துமே சொல்லுகிறான்
விக்கிரமசிங்கராசா என்று என் பேர் சொன்னாலுமடி
உக்குறவு பேய் பசாசு பிடித்த சனி ஒழிக்கும்

பேர்பெரிய ராசாக்கள் பேர்கேட்டால் அஞ்சிடுவார்
வார் வளரும் பூமுலையே வாய் மதங்கள் பேசாதே
மந்திரியைத்தான் அழைத்து மன்னன் சிங்கன் ஏது சொல்வான்
தந்திரமாய் நான் ஏறும்குதிரை ஒன்றை அழையுமென்றான்
அப்போதும் மந்திரியும் அந்தப் பரதி குணம்
தப்பாமலே எடுத்துச் சாத்துகிறான் ராசனுக்கு
அச்சப் புறவியதோ ஆலாவட்டம்போல வரும்
கொக்கு நிறத்தானோ கோவிந்தன் என்னானோ
ஆளுங் கடலதனை அகற்றி வருவனோ
ஏழு கடல் அவனோ எட்டித்தான் பாய்ந்தவனோ
இந்திரனோடு நின்று இனங்கிப் போர் செய்தவனோ
சந்திரனோடு எதிர்த்து நின்று சமயப்போர் செய்தவனோ
எந்தக்குதிரையை நான் இங்கு கொண்டு வாறதையா
அந்தக்குதிரையை நீ அறியவே சாத்திடுவீர்
நல்ல கெதியாக நடந்து செல்லும் பெரிய
வெள்ளைக்குதிரை ஒன்றை தேசத்திலே கொண்டுவா
அந்த மொழி கேட்டவுடன் அன்பான மந்திரியும்
வெள்ளைக்குதிரை ஒன்றை வீசத்தில் கொண்டுவந்து
பொன்னாலே கண்ணடிகள் பூட்டி அலங்கரித்து
கன்னத்துச் சங்கிலியும் கட்டி அலங்கரித்தான்
கண்டத்துச் சங்கிலியும் கலகலென்று தான் அணிந்து
கொண்டுவந்தான் குதிரைதனைக் கொற்றவன் முன்பாக
பார்த்தான் இலங்கை மன்னன் பண்பான குதிரை தன்னை

கீர்த்தி பெற்ற எந்தனக்குக் கிருபையுள்ளகுதிரை என்றான்
முத்து முகமிலங்க முன்வாள் இலங்கிவர
எத்திசையோர் புகழ ஏறினான் குதிரையிலே
வன்னிமார் நடக்கும் மண்டலிங்கர் தான் நடக்கும்
தென்னிலங்கை முடிதரித்துத் தேச மன்னர் சென்றாரே
அதிகாரிமாரிருக்கும் அந்தத் தெருக் கடந்து
திசைமார்கள் தானிருக்கும் திசையெல்லாம் தான் கடந்தான்
அந்தத் தெருக்களையும் அரசன் கடந்த பின்பு
பூசனியாள் தானிருக்கும் பொற்தெருவைத் தான் கடந்தான்
பூவெடுக்கத் தோட்டம்போய் பூக்கொய்து கொண்டுவந்து
புறக்கதவில் வந்து நின்றாள் பூசனி மாமயிலாள்
கண்டான் இலங்கை மன்னன் கன்னி வடிவுதன்னை
கண்டு மதிமயங்கிக் காதலித்து நின்றானே
நின்றவனைக் கண்டவுடன் நிமிசத்தில் கதவடைத்து
கொண்டு விழுந்தாளே கொற்றமங்கை செங்கை நல்வாள்
வெட்டி மறைந்ததுவோ மெல்லிடை சாய்ந்ததுவோ
சிட்டுக்குருவியைப்போல் திரைமறைத்தோம் மந்திரியே
பொன்னின் குடமதுபோல் போய்த்தான் ஒழித்ததடா
எண்ணாத எண்ணமெல்லாம் என்மனதில் தோனுதடா
தச்சன் கடைந்ததுபோல் தம்பிரான் சேர்த்ததபோல்
தட்டி உருக்கியதோ தான் வார்த்து வைத்ததுவோ
தெய்வரம்பை மேனகையோ சிற்றிடை பொற்சிலையோ
வையகத்திலும் காணேன் மாதைப்போல் பெண்ணரசை

எவ்வூரு நாட்டாளோ எங்குள்ளாளோ நானறியேன்
செவ்வையாய் எந்தனக்குச் செப்புவாய் மந்திரியே
ஆலம்பிள்ளை வளர்த்த அருமை மருமகளை
அவள் இவள் என்று சொல்ல ஆகாது ராசாவே
அவ்விதமாய்ச் சொன்னதை நீ ஆலம்பிள்ளை தானறிந்தாள்
கவுண்கொண்டு நம்மள் சதையைக் காட்டில் பறக்கவைப்பான்
சரியல்ல ராசாவே தருமமல்ல உங்களுக்கு
தன்னமைதி சாற்றுமென்று சாற்றினான் மந்திரியும்
நின்றான் இலங்கை மன்னன் நினையாதது தான் நினைத்து
எண்ணாத எண்ணமென்னி ஏங்கி மனம் புண்ணானான்
தள்ளாடித் தள்ளாடித் தன்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்
கண்ணூறு பட்டதுவோ காற்றுப் பிடித்ததுவோ
கூடவந்த பேய்கள் உம்மை கொற்றப் பிடித்ததுவோ
குதிரையிலே சென்றதனால்குலுங்கித்தோ உன் உடம்பு
என்றாளே மன்னவனின் ஏந்திழையாள் மாது நல்லாள்
அந்த மொழிக்கு மன்னன் யாதொன்றும் பேசாமல்
சும்மா கிடந்தானே சொகுசுள்ள பஞ்சனைமேல்
தாதியரே தோழியரே தங்கையரே கேளுமடி
பரிகாரிமார்களைப்போய்ப் பார்த்தழைத்துவாருமடி
அன்னேரம் தாதியர்கள் ஆன பரிகாரியைப்போய்
அழைத்தோடி வந்தார்கள் அன்பான மாளிகைக்கு
பார்த்தான் பரிகாரி பண்புடைய மன்னனைத்தான்
மோக மயல் இல்லாமல் வேறு மயல் இல்லையம்மா

இந்த மயல் தீர்க்க மருந்து என்னிடத்தில் இல்லையம்மா
சொந்த மருந்தொன்று சொல்லுகிறேன் கேளுமம்மா
அரண்மனையிலே இருக்கும் ஆணழகு பெண்களைத்தான்
ஆண்மூச்சி இல்லாத பெண்கள் ஆர் இணங்கும் தாதியரை
போய் அழைத்து வாருமம்மா பொற்கொடியே மாதாவே
அந்நேரம் தாதியர்கள் .....................

(இதில் இருந்து புத்தகத்தில் வரும் பாடல் தொடர்கின்றது)

சோடித்தாள் மங்கை நல்லாள்தோகைவரிப் பட்டாலே
இடையிற் பொன்னாடை கட்டி ஏகாந்தப் பொட்டுமிட்டு
மருவும் விரல்களுக்கு மாமலர்ப்பொன்னாழியிட்டு
கொஞ்சுங்கிளி வஞ்சியரைக் கோலவர்ணங் கட்டியவள்
கூட்டி வந்தாள் ராஜாமுன் கொவ்வையிதழ் மின்னாரை
வாய் கட்டி கைகூப்பி மங்கை நல்லா ளெல்லோரும்
சேலையொதுக்கியே சேரவந்து நின்றார்கள்
மன்னன் தனக்கெதிரே வந்தேவர்கள் நின்றபின்னர்
சற்றாகியும் மன்னன் தலை கிளப்பிப் பார்க்கவில்லை
தாதியரே தோழியரே தங்கையரே நீங்களெல்லோரும்
தனத்தைத்திறந்தரசனுக்குத் தானடப்பஞ் செய்யுமென்றாள்
விசனம் தெரியவில்லை வேந்தனுங்கண் பார்க்கவில்லை
பந்துமுலைப் பெண்களெல்லாம் பார்த்டப்பஞ் செய்தார்கள்
களைதெளியா மன்னவெனும்கண்விழித்து ஏதுசொல்வான்

கரும்பினிய பெண்களே நான் கண்ட புதினமொன்றும்
சொல்கிறேன் கேளுமடி சுந்தரஞ்சேர் தோகையரே
பூசனியா ளென்றொருத்தி புறக்கதவில்வந்து நின்றாள்
போகாத நாடுகளும் போய்ப்பார்த்து வந்தேனடி
வந்துநின்ற கன்னியைப்போல்மண்டலத்திற் கண்டதில்லை
காணாத சித்திரத்தைக் கண்டெழுதி வைத்தேனப்
பூசனியாள் தன்னழகைப் புத்தி கொண்டு நாள்தோறும்
முன்னே எழுந்திடினும் ஏழுபானை தாங்காது
உற்றமொழி சொல்கிறேன் ஓவியமே கேளுமடி
கூந்தலுடையழகோ குலையுங் கடரிருளோ
வாய்ந்த மலையிருளே அவ்வஞ்சி நல்லாள் கொண்டையது
மூன்றாம் பிறையதுபோல் முகஞ்சந்திர பூரணமாம்
தீண்டாத தெண்ணிலவோ அத்தேன்மொழியாளின் முகந்தான்
இருண்ட நிலவுக்கு இருத்தை அமாவாசை யுண்டு
அக்கன்னி முகஞ் சற்றுங் கலங்கா தொருநாளும்
ஆணிமுத்தோ செந்நெல்முத்தோ அலைகடலின்சிப்பிமுத்தோ
இத்தனை முத்துக்களும் இடையில் தமருமுண்டு
அந்நங்கை நல்லாளின் அழகான பற்களுக்கு
ஆரும்வடுச் சொல்லக்கூடாது மங்கையரே
வாய்த்த முருக்கிதழோ வன்னச் சொல் பூவதுவோ
மதுரங்களிச் செண்டதுவோ மந்தாரைப் பூவதுவோ
இப்பெல்லாந் தோற்றுத் தொலைந்திடினும்
மங்கை நல்லாள் வாய்சிகப்பு மாறாதொருநாளும்

ஆரக்குங்குமுகு அல்ருமந்தப்பூ வதுதான்
கன்னிக் கமுகையவள் கழுத்துக்கு ஒப்பிடலாம்
மங்கைகழுத் தாபரண மற்றும் பணிகளையும்
உங்களுக்குச் சொல்லிவர என்னால் முடியாது
செப்பரிய தாமரையின் சிறுவள்ளியோ வறியேன்
இப்பெரிய தேசத்தோ தெடுத்தெறியும் பந்துவோ
பம்புசெறி கன்னிமுலை பகடக்காயோ சிமிளோ
சக்கர வாலப்புள்ளோ சாற்றவுங் கூடுதில்லை
செவ்வல்குரும்பையதோ சிறு மாதுளம்பழமோ
பார்த்தவர்களப்போது பதறியே வெட்டிடுவார்
சிமிளென்று சொன்னாலும் திறப்பார்கள் இப்புவியோர்
மாதுமுலைக்குவொரு வடுச்சொல்லக்கூடாது
ஆலந்துளிர்போல அமைந்திருக்கும் திருவயிறு
சோறுகளை உண்டிருந்தால் சொகுசாய்ப் பெருத்திருக்கும்
மாதுநல்லாள் பூசணியின் வயிற்றினழக்குவொரு
வடுச் சொல்லக்கூடாது மங்கையரே யறிந்திடுவீர்
நூலொன்று சொல்லிடலாம் நொடிக்கு மிடையழகு
சற்றே நடந்தாலும் தளராது தையலிடை
மங்கைநல்லாள் பெண்மயிலின் மாதினிட யழகை
வாயாலெடுத்தெனக்கு வகுத்துரைக் கக் கூடாது
காற்றுக்கு நின்றாலும் கருக்குங்குருத்ததுதான்
வாழைக்குருத்தென்று வருந்தொடைக்குச் சொல்லிடலாம்
அன்னநடைப் பூசணியின் அழகு தொடைகளுக்கு

மன்னரெவருமொரு வடுச் சொல்லக்கூடாது
நீரிலேயோடி நினைத்தவிடம் போகுமந்தக்
கன்னிவிரலைக் கணுக்காலுக் கொப்பிடலாம்
தங்கமய மேனியுள்ள தையலிங்குயிலின்
மங்கைகணுக் காலுக்கொரு வகைசொல்லக்கூடாது
கட்டவிழ்த்துப் பாருமென்பார் காசினியில் மானிடர்கள்
பொத்தகத்தை யென்றும் புறங்காலுக் கொப்பிடலாம்
அழகான மங்கையரி னவயவங்க ளொவ்வொன்றையும்
பழுதுசொல்லக்கூடாது பாவைபுறங் காலையுமே
இப்படிப்பட்டதொரு எழில்பெண்ணைக் கண்டுவந்தேன்
தப்பா தவளைச்சிறை நானெடுக்க வேணுமடி
கண்டிநகர் சுற்றியே வேவிவந்தீ ரென்னிடத்திற்
பாவையரே நீங்களுங்கள் பதிதனக்குப் போய்விடுங்கள்
அவ்வார்த்தை கேட்டவுடன் ஆரணங்கு தாதியர்கள்
செவ்வையாய் வேந்தனுக்குச் சிலமொழிகள் செப்பலுற்றார்
ஐயையோ மன்னாவென் அழகுதுரை ராசாவே
முன்னாளிலே நடந்த முறைமை யொன்றைக் கேளுமையா
சீதையினா லங்கை திசையழிந்து போனதுவுங்
கண்ணகியால் மதுரை கட்டழிந்து போனதுவும்
துரோபதையால்குருவோடு சோரமாய்ப் போனதுவும்
பூசணியாலே கண்டி யிடுபடுங்காண் என்றார்கள்
கண்டியழிந் தாலும் பெண்ணால் கால்மாறிப் போனாலும்
நகரி வழிந்தாலும் நமது திசை மாறிடினும்

பூசணியைச் சேராமற் போவேன் யாமாகில்
இலங்கைமன்ன னென்றென்னைச் சொல்லாதே பெண்ணாளே
வேண்டாமென் ராசாவே வேகமெல்லாம் நீர்தணியும்
பூசணிக்கு ஆசைவைத்தால் பிழைபடும் கண்டி யென்றாள்
வாளா லரிந்துவிடுவேன் வன்கொலைகள் செய்திடுவேன்
நாய்க்கு விருந்தாக்கிடுவேன் நங்கையரே உன்சதையை
நீங்களிருக்குமந்தப் பாங்கான அரண்மனைக்கு
நிற்காது போங்களடி நெட்டூர நீலிகளே
அவ்வார்த்தை கேட்ட பெண்கள் அநியாயம் வருமென்றெண்ணித்
தையலர்களெல்லோரும் தன்மனைக்குச் சென்றார்கள்
மந்திரியைத் தானழைத்து மன்னசிங்கனேது சொல்வான்
மாதுநல்லா ளாசை யெந்தன் மனதிலே நிற்குதுதான்
கன்னியிலங் குயிலாளென் கண்ணெதிரே தோன்றுகிறாள்
என்னவிதமாகவந்த ஏந்திளையை நீரெடுப்பீர்
அவளைச் சிறையெடுக்க அன்பான மந்திரியே
யோசனை யென்றெனக்கு உபாயமாய்ச் சொல்லடா நீ
பூசணியை யென்வசம்நீ பிடித்துத்தருவா யென்றால்
எந்நகரி லுந்தனுக்கு ஏற்றபடி தந்துவைப்பேன்
அவ்வார்த்தை தனைக் கேட்ட மந்திரியு மேதுசொல்வான்
பூசணிக்கு ஆசைவைத்தால் பிழைபடுங் கண்டி யென்றான்
மீண்டுமதை மந்திரியே மிகப்பழுது சொல்லாமலே நீ
போயழைத்து வாருமந்தப் பொற்கொடியாள் பூசணியை
காட்டானை காவலையா கரடி புலி காவலங்கே

கோட்டையைச் சுற்றியே கொடிய சிங்கம் காவலுண்டு
வேட்டைநாய் காவலந்த வீரியஞ்சேர் பூங்கொடியாள்
வாசலுக்குப் போக மனம் அஞ்சுதையா மன்னவரே
வேங்கைக் கெதிரே நின்று வீரியங்கள் சொன்னாலும்
என்னெதிரே நின்று மந்திரி எதிர்மொழிகள் பேசாதே
வேங்கைக் கிரையாக வெட்டியுன்னைக் கொடுத்திடுவேன்
பாங்கான பூசணியைப் பார்த்தழைத்து வாருமடா
இவ்வரசனாலே கண்டி இன்றே யழியுமென்று
மந்திரியு யோசித்து மன்னவனுக் கேதுரைப்பான்
கேளுமெந்தன் ராசாவே கீர்த்தி பெற்ற மன்னவரே
ஆலப்பிள்ளை தன்னை யிவ்வூர்க் கதிபதியாய் வைத்தீரே
அவனைப்பிடித்து வேறோ ரயலூர்க்கனுப்பிவிட்டால்
கூசாமற் கொண்டுவந்து கொற்றவனே நான் தருவேன்
மெய்தானா இதுவென்று விகாரமுற்று அந்தமன்னன்
இங்கேவா மந்திரியே இனியவொரு வார்த்தை சொல்வேன்
கள்ளக் கடுதாசி யொன்று காரியமாய் நானெழுதித்
தாரேன் வாலப்பிள்ளை தனையழைத்து வாடா நீ
ஐயாவே நானுமந்த ஆலப்பிள்ளை யென்பவரைப்
போயழைத்து வாரேனென்று போறானே மந்திரியும்
வாசல்தனைக் கடந்தவனு மற்றுமிடங் கடந்து
வீதிகடந்துமே வேந்தர்தெருத் தான்கடந்தான்
எல்லாத் தெருக்களையும் எட்டி நடந்து அந்த
ஆலப்பிள்ளை வாசலிற் போய் நின்றானே மந்திரியும்

பூந்தோட்டம் போய்ப்பார்த்து புகழ்பெரிய ஆலப்பிள்ளை
வந்தங்கே நிற்கையிலே மந்திரியைக் கண்டானே
கண்டவுடன் மந்திரியைக் கைகளிலே தான்பிடித்து
ஏன்வந்தாய் மந்திரி நீயிங்கென்னிடத்தி லென்றான்
வந்த கருமத்தை நீ மந்திரியே எந்தனுக்குச்
சிந்தையுடன் வாய்திறந்து செப்புவீரென்றானே
சொல்லுகிறேன் கேளுமையா சூழ்ந்ததொரு சேதிதன்னை
ஆலப்பிள்ளை ராசாவே அன்பான படைத்தலைவா
கானல்துரையே யெவருங் கண்டவுடன் தெண்டனிடும்
விக்கிரமசிங்கனெனும் வேந்தனுரைத்தமொழி
வத்துவா கையிலிருந்து வந்த கடுதாசியதை
வாசிக்கவும்மை வரச்சொன்னார் சிங்க மன்னர்
நீர் வாருமையாவென்று நேசத்துடனே சொல்லி
வாய்ப்பேச்சில்லார் மலங்கு வணங்கி நின்றான் மந்திரியும்
வாரேநா னென்றுசொல்லி ஆலப்பிள்ளை அந்நேரம்
அரண்மனைபோக அணிந்தானுடுப்புகளை
பலவர்ணமான தொரு பட்டயத்தைத் தான் தரித்துப்
பூந்து புறப்பட்டு வாராரே ஆலப்பிள்ளை
வெள்ளிக் கசையடிக்க வெண்சாமரை யிரட்டத்
துள்ளுமடவார்கள் நின்று சோபனங்கள் கூறிவர
வன்னியமார் நடக்க மற்றுமுள்ளோர் சூழ்ந்துவர
வந்தானே ஆலப்பிள்ளை வாள்வேந்தர் வாசலுக்கு
கண்டவுடனோடிவந்து கைதனில் ராசா பிடித்து

மண்டபத்திற் கொண்டுபோய் வாசகத்தைச் சொல்லுகிறார்
எந்தோழர் அதிகாரி ஏற்றதுணைப் படைத்தலைவா
நான்சொல்லுஞ் செய்திதனை நன்றாகக் கேளுமையா
நகர்பிடிக்க வென்றிதிலே நன்றாய் வரைந்துளது
பாருமையா கடிதத்தைப் படைத்தலைவா என்றானே
சொல்லியபின் இலங்கைமன்னன் துணையே நீர்ப்பொழுது
ஆறுமாதம் வரைக்கும் அங்குபோய் நில்லுமென்றார்
நான்போறே னென்றந்த ராசனுக்குச் சொல்லிய பின்
பிறவிடுதிப்பட்டவரும் போனாரே ஆலப்பிள்ளை
போகையிலே மருமகனார் பூங்குழலைத் தான் நினைத்து
பூசணிக்குப் புத்தி சொல்லி போவோமென்று போறாரே
ஆலப்பிள்ளை வருமதிர்ச்சி அறிந்திட்ட தாதியர்கள்
ஓடோடியுஞ் சென்று உரைத்தார்கள் பூசணிக்கு
அதைக்கேட்ட பூசணியாள் அதிக மனங்கலங்கி
விழுந்து புரண்டழுது மெல்லியரு மந்நேரம்
நெருப்பை வளர்த்ததன்மேல் நெய்யைச் சொரிந்ததுபோல்
படுப்பாள் னெழுந்திருப்பாள் பஞ்சணைமேல் தூங்கிடுவாள்
எந்தனம்மான் வருகிறது என்னென்ன வஞ்சனையோ
இது புதுமை நானறியேன் எந்தனருள் தோழியரே
எனதம்மானவர்களுக்கு எழிலுடைய நல்லதொரு
ஆசனத்தைப் போடுமடி ஆயிழையே நீங்களென்றாள்
சொன்னவுடன் தோழியர்கள் சுறுக்கா யெழுந்திருந்து
பொற்கட்டில் கவுச்சிகளைப் போட்டாரே ஆயிழைமார்

ஆசனத்தில் வந்தவரும் அமர்ந்திருந்த பிற்பாடு
மறைந்துநின்ற மாதுநல்லாள் மாமனோடே துரைப்பாள்
தாயோடு நீர்பிறந்த தார்வேந்த மாமாயென்
வாசலிலே கால்நோக வந்ததென்ன சொல்லிடுவீர்
தங்கச்சி பெற்றெடுத்த சந்திரன் போலானவன்
சந்திக்க வந்தேனம்மா தையலரசியரே
பொன்னின் ரம்பையரே பூவையரே மருமகளே
புத்தியுனக்கொன்று சொல்லிப் போகநா னிங்குவந்தேன்
என்னபுத்தி யம்மானே யெனக்கு நீர் சொல்லவந்தீர்
வாய்திறந்து சொல்லுமம்மான் வணக்கமாய் நான் கேட்பேன்
வந்துவா கைக்குயென்னை மன்னசிங்கனேவி விட்டான்
போறேநான் போர்களமுன் பத்திபோல் நீயிருப்பாய்
என்ன நினைவுகொண்டு இவ்வார்த்தை நீருரைத்தீர்
என்னையிங்கு தனியவிட்டுப் போறீரோ நெடுந்தூரம்
நெல்விளையும் வயலுக்கு நேர்மையாய் வைத்தவேலி
பொல்லாதவர்கள் கொத்திப் புகுந்து கொள்ளை கொள்வதுபோல்
கொத்திவிட்டுப் போறீரென்னை கொள்ளை கொள்ளவேயினி
யாரார் வருவாரோ நானறியேனம்மா
கண்டி நகரழிந்தாலுங் காலமாறிப்போனாலு முந்தன்மேல்
கற்புநெறி தவறாமலே நீ காப்பாற்றிக் கொள்ளுமம்மா
எந்தனாற் சொல்ல இனியெனக்குக் கூடாது
நான்போறே னென்றவரும் நற்பயணஞ் சொன்னாரே
ஆறுமுகங் காப்பார் அடியாளின் மானமதைப்

போய்வாரும் மாமாவே பொழுதாகிப் போகுதென்றாள்
அவ்வார்த்தை கேட்டுமல்லோ ஆலப்பிள்ளை மனங்கலங்கி
எண்ணாத யெண்ணமெண்ணி எழுந்தவருஞ் சென்றாரே
வீதி கடந்தந்த வேந்தர் தெருத் தான்கடந்து
தானிருக்கு மாளிகைக்கு வாராரோ ஆலப்பிள்ளை
அவர்வார கெம்பீரத்தைக் கண்டறிந்த மங்கிலியம்
ஓடிவந்து மன்னவனை யொருவாறு பார்த்துரைப்பாள்
ஐயையோ மன்னாவென் அழகுதுரை ராசாவே
இந்நாளில் வாசலக்கு ஏகிவந்த காரணமேன்
தாமரைப் பூப்போற் றளருமே மேனியெல்லாம்
இன்றைகிலையோ விளைத்திருப்பதேனென்றாள்
என் பெண்ணே இளங்கிளியே பூவையரே கேளுமடி
என்னை இலங்கை மன்னன் ஏவிவிட்டான் போர்க்களத்தில்
எந்தன் மருமகளுக் கினியதந்தை யாருமில்லை
போறேனா னிப்போது புத்திபோல் நீயிருப்பாய்
கண்குறையைப் பாராதே கன்னியின் மின்னுரைப்
போறேனென்று ஆலப்பிள்ளை பிறவிடுதிப்பட்டாரே
போறீரோ மன்னா நீர் புத்தியொன்றுஞ் சொல்லாமல்
வாறதுநீரெப்ப வென்றோர் வார்த்தை சொல்லிப் போங்களையா
வருவேன் பெண்ணே சீக்கிரமென் மக்கள்மைந்தரெல்லோரும்
பதனங் பதனமென்று போறாரே ஆலப்பிள்ளை
அப்போர்வேந்தன் தன்னுடனே போனவர்களாரென்றால்
வில்லம்புக்காரர் வெடிதுவக்குக் காரர்களாம்

இன்னுங் கள்ளர் மறவர்களும் கையீட்டிக் காரர்களும்
சோனர் துலுக்கர்களும் தொழும் பட்டானிகர்களும்
காப்பிலிமார் வேடர் கண்கொள்ளாச் சேனைகளும்
கடல்போலவே முழங்கி கதித்துமே சென்றதப்போ
தம்பட்டமல்லாரி தாரை சின்னந் தாள்முழங்க
அம்பட்டமார்களும் அடர்ந்து மிக நெருங்க
கும்பிட்ட வண்ணார்கள் கூடிப்பாடையிடச்
சென்றாரே ஆலப்பிள்ளை சேர்ந்தபடைச் சனத்துடனே
எட்டுநாள் தூரம் இவர்கள்தான் போனபின்பு
திட்டமுடன் சிங்கமன்ன னச்சேயிழைக்குத் தூதுவிட
மந்திரியைத் தானழைத்து மன்னசிங்கனேது சொல்வான்
மாதுநல்லாள் பூசணியை மறக்கவுங்கூடுதில்லை
வாயிதலைச் சுவைத்து மருவியணைத்திடுவதற்குப்
போயழைத்து வாருமென் புத்தியுள்ள மந்திரியே
ஐயாநீர் பூசணிமே லாசைவைத்தீ ரானாக்கால்
மெய்யாகக் கண்டிக்கு விளையுங் கெடுதியென்றான்
ஆலப்பிள்ளை அதிபதியை அயலார்க் கனுப்பிவைத்தால்
சாலமாய்ப் பூசணியை நானெடுத்து வருவேனென்றான்
மீண்டுமந்த வார்த்தைகளை மிகப்பழுது சொல்லாமல்
போயழைத்து வாருமந்தப் பொற்கொடியாள் பூசணியை
அரசனாற் கண்டி அழியவே போகுதென்று
தானினைந்து மந்திரியும் போயழைத்து வாறேனென்றான்
சொன்னதின் பின்னாலே சுறுக்காகவே யெழுந்து

போறானே மந்திரியும் பூசணியாள் தன்மனைக்கு
வாசல் கடந்தல்லோ மற்றுமிடந் தான்கடந்து
வீதிகடந்து மற்ற வேந்தர்தெருவுங் கடந்தான்
எல்லாத் தெருக்களையும் கெதியாய்க் கடந்தந்தப்
பூசணியாள் மண்டபத்திற்கு புகுந்து நின்றான் மந்திரியும்
ஆண்டவுடனேயந்தக் காரிகையுமோடி வந்து
ஏன்வந்த யண்ணா நீயிங்கென்னிடத்தி லென்றாள்
வந்த கருமமதை வாய்திறந்து அண்ணாவே
சிந்தையுடன் சொல்லுமென்று சேயிழையுங் கேட்டாளே
நல்லமன தோடுமக்கு நான்வந்த காரணத்தைச்
சொல்லுகிறேன் தங்கையே நான் தோகையரே பூசணியே
விக்கிரமசிங்கனென்னும் வேந்தனிங்கு வந்தபோது
கண்டு மனங்குளிர்ந்து காதலுன்மேல் கொண்டாரே
வரச்சொன்னாரம்மா வுன் மனதுதான் சம்மதியே
பிள்ளைச் சலிமனமோ சொல்லுனக்குத் தங்கையரே
அவ்வார்த்தை கேட்டந்த மங்கைநல்லா ளேதுசொல்வாள்
சொல்லுமண்ணா ராசனுக்குச் சோகமிக வேண்டாமென
வாலைப்பருவமல்ல வன்சிறிய பிள்ளையண்ணே
காளைப் பருவமென்று கன்னிசொன்னா ளென் றுரையும்
அம்மான் வருமளவும் அரசர் மனம் பொறுத்துச்
செம்மையோடே யிருந்ததால் சிந்தனை போலவேதான்
மணம்புரிந்து இருபேரும் வாழ்ந்து இருப்போமென்று
சொல்லுமண்ணே ராசனுக்குத் துன்பமிக வராமல்

மன்னவனோடேதுரைப்பான் மதியமைச் சனன்னேரம்
மங்கை நல்லாள் சொன்ன சொல்லைமன்னவனேகேளுமையா
வாள்போலுங்கண்ணாளும் வார்த்தை யெல்லாம நல்லதென்றான்
மாமன் வருமளவுங் மன்னன் பொறுத்திருந்தால்
மணமுடித்துப் புவியில் வாழ்ந்திருப்போமென்றாளே
வார்த்தைகளைக் கேட்ட மன்னசிங்க னேதுசொல்வான்
வாடாயென மந்திரியொரு வளமான செய்திசொல்வேன்
கண்டியிலே பாதி கணக்காய்க் கொடுப்பேனென்று
மங்கையர்குச் சொல்லி வரவழையும் சீக்கிரமாய்
ஆணிமுத்து மாலைகளும் அழகுமணி மண்டபமும்
வேணுமென்ற ஆபரணம் மெல்லியற்கு இப்பொழுது
அன்பாகத் தருவேனென்று ஆசைமொழி போய்ச்சொல்லி
பூசணியை இங்கே பிடித்து வா மந்திரியே
வார்த்தைதனைக் கேட்டந்த மந்திரியு மோடிவந்து
மங்கையரோடே மதியமைச்சன் சொல்லுற்றான்
சொல்லுமண்ணே ராசனுகடகு தோகைநான் சொல்லுவதை
கண்டி நகர் வேண்டாமாம் கனத்தபணி வேண்டாமாம்
அடியானோர் வார்த்தையொன்று அம்மானுக்குரைத்ததினால்
அம்மானிங்கு வரட்டுமென்றவ்வரசனுக்கு சொல்லுமண்ணே
அவள் சொல் கேட்டவுடன் மந்திரியு மோடிவந்து
மன்னவனைக் கண்டு மலர்க்கையால் தெண்டனிட்டான்
நல்லது மந்திரியே கடந்த கதைகளெல்லாம்
சொல்லுநீ எத்தனுக்குச் சுருக்காக நானறிய

அம்மானுக்கோர் வார்த்தைதான் அன்பாகச் சொன்னதினால்
அவர்வரட்டுமென்றந்த ஆயிழையுஞ் சொன்னதுவே
அவ்வரசனிதைக் கேட்டு அதிக கிலேசமுற்று
மந்திரியோடந்த மன்னசிங்க னெடுத்துரைப்பான்
சென்று நீரங்கேபோய்ச் சேயிலையைக் கண்டெங்கள்
மன்னனுமையொன்றுஞ் செய்யவில்லையென்று சொல்லும்
கண்ணாலே காணுதற்குக் கனசோட்டபை யிருக்கா
ரென்றுசொல்லிக் கைப்பிடியாய் கொண்டுவர சீக்கிரமாய்
மனங்குளிர்ந்த வார்த்தைகளை மந்திரிகேட் டோடிவந்து
அந்தமங்கையாரோடே அவ்வமைச்சனேதுரைப்பான்
உன்னையொன்றுஞ் செய்யவில்லையாமந்த மன்னனம்மாவைக்
கண்ணாலே காணுதற்குக் கனசோட்டையாயிருக்காம்
மன்னன்வரச் சொன்னாரம்மா மனதுக்குச் சம்மதமோ
என்னசலிமனமோ எனக்குச்சொல் தங்கையரே
சொல்லுமண்ணே ராசனுக்குத்தோகையுரை மொழியதனை
என்னையொன்றுஞ் செய்வதில்லை என்றாரே யந்தமன்னன்
மதங்கொண்ட யானையொன்று வந்தெதிரே நிற்குமென்றால்
கரும்பைக் கொடுத்தாலது கடியாமல் தந்திடுமோ
மன்னன்மதங்கொண்டிருந்தால்மருவாதெனை விடுவானோ
சொல்லுமண்ணே நீர்நல்ல புத்தியொன்று ராசனுக்கு
எந்தனம்மான் வந்தபின்பு இருபேரும் சேர்வோமென்று
அந்தமன்ன ராசனுக்கு அன்பாக சொல்லுமென்றாள்
மாதுசொன்ன வார்த்தைகளை மந்திரியுங் கேட்டுவந்து

நீங்களும் ராசாவே நேசமங்கை வாய்மொழியை
மாமனிங்கு வந்தபின்பு மருவியிருபேருமதாய்ச்
ஜீவித்திருப்போமென்று ராசனுக்குச் சொல்லுமென்றான்
இதைக் கேட்ட வேந்தனவன் எழுந்து கெம்பீரமுடன்
சஞ்டென்று உட்சென்று பெட்டகத்திலொன்றெடுத்தான்
பட்டுவகைகளும் பலதுயில்களும் அடுக்கி
ஆபரணமெல்லா மடுக்கியே பூட்டிவைத்து
மந்திரிகையிற் கொடுத்து மாதுக்கிதைத் தரித்துப்
பூங்கொடியாள் பூசணியைப் பிடித்துவா என்றானே
பெட்டகத்தைக்கொண்டுபோய்பொற்கொடியாள் முன்னே வைத்து
நின்றானே மந்திரியும் நேரிழையாள் பக்கமதில்
சாவியைத் தானெடுத்துத் தையநல்லாள் தான்திறந்து
பார்த்தாளே பெட்டகத்தைப் பட்டு பணிகளெல்லாம்
கிலேசமிக வுண்டாகிக் கீழே புரண்டழுது
மெல்லியருமேது சொல்வாள் மேன்மையுள்ள மந்திரிக்கு
இதுவரையிற் சொன்னசொல்லை இலங்கை மன்னன் கேட்கவில்லை
புத்தியில்லையோ வந்தப் பேரிலங்கை மன்னனுக்கு
நான்சொன்ன கதையாலே ராசனுக்கு ஓரறிவும்
இன்னும் வராமலிருப்பதை யானறியேன்
கல்லுமுருகிவிடுங் காதுந் திறந்துவிடும்
மன்னனுடைய நெஞ்சிலே மறுபுத்தி தானிலையோ
நல்லவனாகானவன் காண் நாராயணன் கீழ்சாதி
நான் சொன்ன சொல்லையெல்லாம் நன்மனதிற் கேட்கவில்லை

எந்தமட்டு மன்னா நீ இன்பமாய்ச் சொல்லிவந்தீர்
அந்தற்பப் புத்தியோனை அரசினிலும் வைக்கலாமோ
கொச்சிவழு தலையுமவன் கூறுகின்ற பூசணியும்
விற்றவனுந் தின்றபுத்தி விலகவில்லை நெஞ்சைவிட்டு
சும்மாயிருந்தவனைச் சுந்தரஞ்சே ரென்மாமன்
கண்டி அரசாளக்கனமாக வைத்ததினால்
வேலிக்கு வைத்தமுள்ளு காலுக்கு தைக்குமென்று
காசினியோர் கதை படிப்பதைக் கண்டேனே என்னளவில்
யானையுடன் யானை அடர்ந்து புனராமல்
பூனையுடன் யானை புணருமோ பூவுலகில்
பொன்னோடுபொன்சேர்த்துப் பொருத்தவேலைசெய்யாமல்
செம்போடு பொன்னுமொன்றாய்ச் சேருமோ இவ்வுலகில்
கள்ளப்பயல்தன்னைவந்துகண்டுகொள்ளச்சொன்னானே
வழிசற்பயலென்னை யவன் வாழவரச் சொன்னானே
என்று சினந்தெழுந்து எழில் முகத்தாளந்நேரம்
கட்டோடே புல்லுவைத்தாள் கங்கிலியச் சீலைவைத்தாள்
தூதுகையிற்கொடுத்திந்த தொடுசெருப்பாலடிப்பேனென்றும்
சொல்லுமண்ணே ராசனுக்குச் சோராமல் நீர்மீண்டும்
திரும்பிநீர் வந்தால்தான் தீண்டுவேனுன் சதையையென்று
மந்திரியை யனுப்பிவிட்டாள் மங்கைநல்லாளந்நேரம்
மனதிலகமதாய் மனக்கவலை யுண்டாகிப்
பாதையிலே பள்ளி கொண்டாள் பூசணியும்
பெட்டகத்தைத் தானெடுத்துப் புத்தியுள்ள மந்திரியும்

எண்ணாத எண்ணமெண்ணி ஏங்கிமனம் புண்ணானான்
நல்வார்த்தை சொன்னாளே நாட்டிலங்கை மன்னனுக்கு
என்று மனங்கலங்கித் தியக்கமுற்று மந்திரியும்
பெட்டகத்தைக் கொண்டுவந்து பேசாமல் வைத்துவிட்டு
நின்றானே பேரிலங்கை மன்னனுக்கு முன்பாக
கண்டானிலங்கை மன்னன் கண்ணிரண்டும் பொறிபறக்க
நின்றுமிகப் பற்கடித்து நேரிளைமேற் கோபமுற்றான்
எந்நகருக்குள்ளிருந்து இழிமொழிகள் சொன்னவளைக்
கொன்றுவிடுவேன் நான் கொலைகழுவில் வைத்திடுவேன்
என்னை அவளாரென்று எண்ணினாளோ நானறியேன்
நாக்கை யிழுத்தறுத்து நாய்நரிக்குப் போடுவிப்பேன்
என்பேருஞ் சொல்லியிப்போ இவ்வுலகம் போனதென்றாள்
எண்ணமதிகொண்டு இருப்பேனடா மந்திரியே
காகங் கரையாது கன்றுமுலை தொட்டுண்ணா
நாகம் படம் விரித்து நன்றாக ஆடுமோதான்
காட்டின் குருவிபட்சி கனிந்தபழந் தின்னாது
பன்றி குரங்குதின்னிப் பச்சோடும்பு தின்னு
சின்னமுள்ள சிங்களத்தி சேராமலென்னை யவளும்
என்னையிழிவாகயவள் ஏசி யனுப்பினாளே
விடியட்டும் நானுமந்த வேசியரைத் தான்பிடித்து
மங்கையர்கள் சிரிக்கவொரு மானபங்கஞ் செய்யவென்றான்
சொல்லியபின் ராசனுக்குச் சோக மிகவாகிப்

பஞ்சனை மெத்தையிலேபள்ளி கொண்டானிலங்கைமன்னன்
இம்மொழியைத் திசைமார்கள் இனிதாகத் தானறிந்து
இந்நகரழியுமென்று ஏகியவ ரோடிவந்து
அம்மாவுக் கிம்மொழியை அறிவிப்போ மென்றவர்கள்
மறைவாக நின்றந்த மங்கையரோடே துரைப்பார்
பூசணியே தங்கையரே புத்தியொன்று சொல்வதைக்கேள்
விழுந்து நீரிங்கிருந்தால் வேந்தனும்மைப் பழிசெய்வான்
பொழுது விடிவதற்குள் போய்விடுவுன் மாமனிடம்
என்றவர்கள் புத்திசொல்லி ஏகினாரெல்லோரும்
அவ்வார்த்தை தனைக்கேட்டு அந்த மங்கைநல்லாளும்
ஒவ்வாமனத்துயரால் ஒண்டொடியும் சொல்லுகிறாள்
எனக்குத் துணையாக ஏந்திழையார் தாதிகளே
பாருங்கோ நீங்களென்று மங்கையரு மழைத்தாளே
மழைக்காலிருட்டதிலே மண்மீதிலே நடந்து
மாமியிடம்போனாளப் பூசணி மாதுநல்லாள்
மாமியிதைக் கண்டவுடன் மனதுமிகக்கலங்கி
அன்னநடைச் சின்னயிடை அழகு மருமகளே
பொன்னின் மலர்க்கால் நோகப் பூவையரே இங்கு நீ
வந்தகருமமதை வாய்திறந்து சொல்லுமம்மா
அம்மானுக்கேற்றவன் னழகுடைய மாமியாரே
பொல்லாத விக்கிரமன் பெண்ணுக்கெனைக் கேட்டானே
மோகமிக்ககொண்ட மூடனங்கு வாராமல்
ஆகாக்ககருமமென்று அனுப்பிவிட்டு வந்தேனம்மா

கேட்டு மனங்கலங்கிக் கிலேசமிக வுண்டாகி
விழுந்து புரண்டழுதந்த மெல்லிநல்லா ளேதுசொல்வாள்
இங்கிராதே பிள்ளையரே ஏந்திழையே பூசணி நீ
பொழுது விடிவதற்குள் போய்விடுவுன் மாமனிடம்
எப்படிநான் போவேனம்மா இருளமைந்த வனந்தனிலே
தப்பிதங்கள் வந்திடுமோ தனியே நான் போவேனோ
என்று மனங்கலங்கி ஏந்திழையுநேரம்
என்னோடுவாற தந்த இன்னமுள்ள தாதியேகேள்
நஞ்சு புசித்தாலும் நம்மிருவர் தம்மினிலே
வஞ்சித்தொரு நாளும் மறந்துநான் பசியேனடி
தாதியரோடவளும் சகலவகை பேசியபின்
வாருங்கள் நீங்களென்று மங்கையு மந்நேரம்
தண்டைகளும் பீலிகளும் தங்கச் சரப்பளியும்
கொங்கைக்குக்குச்சணிந்து சுடர்விழிக்கு மையெழுதி
நெற்றிக்குப் பொட்டுமிட்டு நீலரத்ன காப்புமிட்டு
தங்கநிறப் பல்லக்கில் தையல்நல்லா ளேறினயே
வன்னியமார் நடக்க மற்றோருஞ் சூழ்ந்துவர
பொன்னனைய கன்னியரும் போனாள் புறந்தனிலே
கண்டிநகர் னடந்து கனத்தவனந் தான்கடந்து
நந்தவனங் கடந்து நல்லதிசயம் பார்த்தாள்
இருட்டு வனந்தனிலே ஏந்திழையாள் போகையிலே
அந்த அதிசயத்தைக் கண்டுமே ஆரணங்கு
நெடுந்தூரம் போனாளே நேர்மையுள்ள பூசணியும்

மங்கை வனந்தனிலே வருகையிலே யந்நேரங்
குஞ்சரங்கள் கண்டு கூவென்று தான் துரத்தும்
துரத்தி வருகையிலே தோகை பூசணியை விட்டு
ஓடினார் தாதியர்கள் ஒருமிக்கத் தான் திரண்டு
கையூதி மெய்நடுங்கிக் காலுதைத்து ஓடிவரும்
எழிலுள்ள யானையைக்கண் டேந்திழை பூசணியும்
கண்டிக்கு நானும் கனகாலம் வந்ததென்றால்
ஆணேறேகுஞ்சரமே ஆயிழையாள் சொல்லுகிறேன்
என்னையொருவனுக்கு என்தாயும் பெற்றதென்றால்
பத்தினி என்றென்னைப் பலபேரும் சொல்லுகிறார்
என் தாயே ஆணேறே குங்சரமே எத்தனை நீ
கொல்லாதே இந்நேரம் கொல்லாதே என்றழுதாள்
காதை விசிக்கியது கட்டழகி சொற்கேட்டு
வாதுபண்ணுதுகரி வனத்துக்கு ஓடினதே
குஞ்சரத்தைக் கண்டந்தக் கோதைபயத் தாலேவிழ
அந்த இளம் பெண்ணுடனே வந்தமற்றோ ரோடிவந்து
மங்கையரைத் தூக்கியே மார்போடு தானணைத்துத்
தேற்றியே யெடுத்வுடன் திருநீற்றுக் காப்புவிட்டார்
அந்தவனத்தைவிட்டு அன்பாகத் தாதியர்கள்
சீக்கிரமாய்க் கொண்டவர்கள் சென்றாரே சேயிழையை
நெல்லுவனம் புல்லுவனம் நெற்றோப்பு நீர்கடந்து
காடுமலை புற்பூண்டு கனத்தவனமுங் கடந்து
எட்டுநாட் பயணமதை எட்டுமணிக்குள்ளாக

வந்துவாகையாற்றைக் கண்டாளே மாதுநல்லாள்
தாளமுள்ள கங்கையாறு தான்போகக் கூடாது
எப்படித்தான் போவதென்று ஏங்கிநின்றாரெல்லோரும்
அந்நேர மங்கைநல்லா ளதிக மனஞ்சலித்து
கங்கைக்கரையில்வந்து கனிமொழியாள் நின்றுசொல்வாள்
கங்கையரே தங்கையரே கன்னியாள் சொல்லுகிறேன்
அன்று சந்திரமதியுடனே அரிச்சந்திர ராசாவும்
காசிநருக்குக் கடனிறுக்கப் போகையிலே
அக்கினியா றொன்னைக் கடந்து அப்பாலே போனார்கள்
மந்திரியும் போனான் வருகுது கங்கையென்று
மன்னவருஞ் சொன்னாரே மதிசொல்லுச் சரியென்று
மூவரையுந் தான் நிறுத்தி முன்போனாள் சந்திரமதி
அக்கினியாற்றைக் கடந்து அப்பாலே போனார்கள்
அதுபோலக் கங்கையரே அன்றந்தக்கினி யாறு
அதற்கு வழிவிட்டாற்போல் அடியாளுக் கிப்பொழுது
மனத்துயரைத் தீர்ப்பதற்கு மாதுநா னிங்குவந்தே
யென்தாயே கங்கையரே யெனக்கு வழி தாருமென்றாள்
ஓடியந்தக் கங்கையுடனே சுழிமாறித்
திட்டி வளர்ந்து திடரெல்லாம் மண்மேவி
வந்த சனமுமந்த மங்கையருமாய் நடந்து
ஆற்றைக் கடந்தவர்கள் அப்பாலே போகையிலே
மாற்றான் படையொன்று வருகிற தென்றறிந்து
தன்படையை ஆலப்பிள்ளை தானனுப்பிவிட்டானே

படைகளைக் கண்டவுடன் பதறி மனங்கலங்கித்
திகைத்தந்த கன்னியரும் சேயிழைக்குச் சொல்லலுற்றாள்
அம்மான் படையோ நம்மை அழிக்க வரும் படையோ
எந்தப் படையோவென்று ஏங்கிநின்றா ரெல்லோரும்
கன்னியவளி றங்கிக் கருத்தாக வெளியில் நின்று
பார்த்தாளே யுற்றதனைப் பண்புடைய பூசணியாள்
தென்றல் வந்து வீசச் சேயிளையாள் வாசமது
ஆலப்பிள்ளை மூக்கில் அப்போது வீசினதே
இந்த மணமுடைய ஏந்திழைமா ராருமில்லை
இதுயெந்தன் மருமகள்தானென்று மவனெண்ண லுற்று
அஞ்சலென்று தன்படையை யமர்த்திய பின்னாலப்பிள்ளை
கண்டான் மருமகளைக் கன்னியிளந் தோகையரை
மறைந்தாளே வெட்கியந்த மாதுநல்லா ளப்போது
அன்னநடை சின்னயிடை அழகுமருமகளே நீ
காடுகடந்தறியாய் கனத்தவனந் தானறியாய்
வீடுவிட்டு மருமகளே வெளிக்கிட்டு நீயறியாய்
நெல்லுவனமறியாய் நெற்றோப்புத் தானறியாய்
புல்லுவனமறியாய் புற்பூண்டும் கண்டறியாய்
இந்த இருள்வனத்தால் ஏன்வந்தாய் மருமகளே
வந்த கருமத்தையுன் வாய்திறந்து சொல்லுமம்மா
தாயோடு நீர்பிறந்த தார்வேந்த ரம்மானே
உம்மோடு சொல்லுதற்கு உடல்மெத்தக் கூசுதம்மான்
தோழியரைக் கேளுமென்று சொன்னவுடன்பாங்கியர்கள்

அந்நேரம் பெண்களெல்லாம் அழுதுவிழுந் தேதுரைப்பார்
நீரிங்கு வந்தபின்பு நிட்டூர விக்கிரமன்
மாதுவை மணம் புரியக் கேட்டானே அந்தழிவான்
அதனால் மனத்துயரம் கொண்டுங்கள் மருமகளார்
அம்மானிடம் போமென்று அனுப்பிவிட்டு வந்தோமையா
கேட்டவுட னாலப்பிள்ளை கிலேசமிக வுண்டாகி
நெறுநெறுன்று பற்கடித்து நின்றவனு மேதுசொல்வான்
பெண்டாளக்கேட்டவனைப் பூமியில்வைப்பேனோ வந்தக்
கள்ளப்பயலை நான் கட்டியடிப்பே னென்றான்
அங்கே யிருந்தேனென்றால் அந்தக்கீழ் ஜாதியை நான்
செங்கையினாற் றூக்கிச் சிதற அடிப்பேனே
தலையை யுடைத்தவனைத் தரையிலே போட்டுத்தான்
காலா லுதைத்து நான் கழுவிலே வைத்திடுவேன்
நல்லதிருக்கட்டுமம்மா நல்விடுதி போங்களென்று
விட்டானே ஆலப்பிள்ளை வீரியமா யந்நேரம்
விடுத்திக்குப் போகையிலே விவேகமுள்ள பூசணியாள்
நடந்த வருத்தமல்லோ நான்சகியேன் தாதி என்றாள்
பசியாறி நீங்களெல்லாம் படுத்துறங்கு மென்றுசொல்லிப்
பஞ்சணை மெத்தையிலே பள்ளிகொண்டாள் பூசணியும்
பசியாறித் தோழியர்கள் படுத்துறங்கும் வேளையது
பார்த்திருந்த பூசணியாள் பையவே யெழுந்து வந்து
ஆற்றில் விழ வேணுமென்று ஆரிழையு மந்நேரம்
கங்கைக் கரையோரம் கால்நடையாய் வந்து நின்றாள்

அவ்விடத்திலே நிற்கும் அத்திமர மொன்றின் மேல்
அநேகவித பட்சி யடைத்தங் கிருந்ததுவே
ஆற்றில்விழப் போறாளே அழகுள்ள சிங்களத்தி
ஆருக்குத் தெரியாதென றலறியதே பட்சியெல்லாம்
கண்டுநக ராலப்பிள்ளை கண்மணிபோல் வளர்ந்த
பூசணி மாதென்னும் பொற்கொடியாளாயிருக்கும்
சாகத் துணிந்தாளிச் சம்பவமெனபாவமென்று
அலறி அழுதிடுமா மம்மரத்துப் பட்சியெல்லாம்
அவ்வார்த்தை தனைக்கேட்டு அழகு மங்கைநின்று சொல்வாள்
ஐயோவென் கெங்கையரே அடியாள்யான் சொல்லுகிறேன்
கண்டிக்கு நானும் கனகாலம் வந்ததென்றால்
என்னையொருவனுக்கே என் தாயும் பெற்றதென்றால்
பத்தினி யென்றென்னைப் பலபேருஞ் சொல்லுகிறார்
மானங்குறையாமல் மன்னரென்னைக் காணாமல்
பாதாள கங்கையிலே பதித்துவிடு கங்கையேயென்
கால்மேலே தலையுடலைக் காட்டாதே கங்கையரே
என்றிருகை கூப்பி ஏந்திழையா ளந்நேரம்
கொக்கெரித்தாற்போல் வேதமுள்ள பூசணியாள்
மாணிக்கக் கல்லையள்ளி வாரியிறைத்தாற்போலத்
தலைகீழாய்த்துள்ளியல்லோ தான்விழுந்தாள் கங்கையிலே
பூசணியாள் கங்கையிலே போய்விழுந்த பிற்பாடு
தோழிமார் பார்த்தார்கள் தோகையைக் காணவில்லை
வெளிச்ச மெடுத்தந்த மெல்லியரைத் தேடிவந்து

காணக் கிடைக்கவில்லை கனங்குழலாள் பூசணியை
தாதியரே தோழியரே தங்கையரே கேளுமடி
பூசணியாள் திருவடியிப் பூங்காவிற் கண்டேனடி
சிற்றடியைக் கண்டதல்லால் சேயிழையைக் கணவில்லை
இங்கு பிளகருந்தித் துப்பியதைப் பாருமென்றாள்
எங்குதான் போனாளோ ஏற்றதொரு பூசணியாள்
ஆற்றில் விழுந்தாளோ யிவளாருக்குத் தான் தெரியும்
என்ன சொல்வோம்மாமனுக்கு ஏற்றமொழி யென்றவர்கள்
கூவென் றழுதவர்கள் கூடமாய்ப் போனார்கள்
ஆலப்பிள்ளை தம்மிடத்தில் அவர்கள் மிகக்குமுறி
பூசணியா ளாற்றிலே போய்விழுந்தாளென்றார்கள்
என்றந்தச் சேடியர்கள் ஏங்கி முறையிடவே
விழுந்து புரண்டழுதான் வீரமுள்ள ஆலப்பிள்ளை
நினைத்து நினைத்துமவன் நெட்டுயிர் மெய்சோர்ந்து
மனத்துயரை யாற்றாது மங்கையரைத் தானினைத்தான்
சின்ன இடையழகும் சிறந்த முகத்தழகும்
அன்ன நடையழகும் அன்பாய்நான் காண்பதெப்போ
அழகாய்ப் பிறந்தயெந்தன் அருமைப் பூசணியேயுனைக்
கண்ணாலே கண்டேன் கனசோட்டை தீர்க்கவில்லை
என்னைமறந்து நீ எப்படித்தான் போனாயோ
தாழமுள்ள கங்கையிலே தனியாக விழுந்தாயோ
சந்திர்கள் சூரியர்கள் தானவர்கள் கண்டாரோ
அம்மா நீயெப்படித்தான் ஆற்றிலேவிழுந்தாயோ

அந்த வாசனை நான் அவதூறு செய்தாலும்
கானக்குயிலேவுனைக் காண்பதினி யெக்காலம்
ஏழுசுற்றுக் கோட்டை இணக்கமாய்க் கட்டிவைத்தேன்
தங்கரெத்தினப் பல்லக்குத்தான் சமைத்து வைத்தேனே
பூவெடுக்கப் போனீரோ புறக்கதவில் கண்டானோ
அரசனுமைக் கண்டு ஆசைமிகக் கொண்டானோ
அவனாசை வைத்தன்று அங்கே யிருந்தேனென்றால்
செய்யாத காரியங்கள் செய்வேனே அரசனுக்கு
என்னதான் செய்தாலும் ஏந்திழையே யென்கிளியே
வண்ணமயில் மருகளே மனக்கவலை தீராதே
கண்டிக்கு நானும் கனகாலம் வந்தேனம்மா
உன்னாலே செல்வம் உலகுதனை ஆண்டேனம்மா
எந்தப் பிறப்பிலம்மா உனைக்காணப் போகின்றேன்
பத்தினியென்று பலபேருஞ் சொன்னாரே
பத்தினி தனத்தாலெனைப் பார்க்க நீ வந்தாயே
சின்ன வயதல்லவோ சிற்றிடையே மருமகளே
கலியாணம் செய்யவில்லைக் கண்ணழகு பார்க்கவில்லை
உன்சிறப்பும் பார்க்கவில்லை உத்தமியே பூசணியே
பூமிதனி லின்னமுந்தான் புகழுண்டோ எந்தனுக்கு
ஏழுபிள்ளை நான்பெற்று இன்பமுடனே வளர்த்தேன்
மூத்தமகன் றனக்கு மணம் முடித்துன்னை வைப்பதற்கு
எண்ணினே னம்மாவே என்னழகு பூசணியே
எண்ணமெல்லாம் பொய்யாகி எழுத்தெல்லாம் மெய்யாகி

விளைந்ததுவோ வல்லவனே வித்தகனே இவ்விதிதான்
என்னதான் செய்தாலும் ஏந்தல் தனைக் கொன்றாலும்
கன்னல்நிகர் மருமகளே காண்பதுனை யெக்காலம்
நினைக்க நினைக்க மனம் நெருப்பாய் எரியுதம்மா
நீங்காது நெஞ்சைவிட்டு நேரிழையே வுன்னெண்ணம்
ஆயிரங்கால் மண்டபமும் அதற்கேற்ற திண்ணைகளும்
பொன்னின் மிதியடியிருக்கப் பூமியிற்கால் வைத்தீரே
மாமியிடம்போக நீர் மாமனிடம் போவென்று
சொன்னாளோ மாமியரும் தோகையரே உன்னோடு
இருட்டுவனந்தனிலே என்கிளியே யுன்னுடைய
மாமனைக் காணவென்று வந்தீரோ மருமகளே
யானையைக் கண்டுநீ அஞ்சிப் பயந்தாயோ
ஆற்றைக் கடந்து நீ ரம்மானைக் கண்டீரோ
என்னை நீர் கண்டபின்னிந்தாளமுள்ள கங்கையிலே
கன்னிவிழுந்திறந்த துயரென்னைவிட்டு மாறாதே
சந்திரர்கள் சூரியர்கள் தானவர்கள் வானவர்கள்
மெச்சிடவே ஆண்டவனே கண்டி நகருன்னாலே
ஒருமிக்க வந்ததுதான் ஊரெல்லா மிப்பொழுது
கள்ளப்பயலைநான் கட்டியடிப்பேனோ
பெண்ணுக்கு வந்தவனைப் பூமியிலும் வைப்பேனோ
உன்னை யுடைத்தவனைத் தரையிலே போடேனோ
மாமியிதையறிந்தால் மாய்த்திடுவாளே யுயிரை
இக்கண்டி நகராள வைப்பேனோ கள்வனை நான்

மாற்றானை இங்கு வரவழைத்து இப்போது
கண்டிதனைப் பிடித்துக்கொடுக்கிறேன் பாருமென்றான்
கள்ளபின் கஞ்சாகுடிக்கும் கனத்தவெறி காரரைப்போல்
தள்ளாடித் தள்ளாடி தானடந்தான் வனந்தனிலே
பொழுது விடிந்து புறப்பட்டான் மெய்யோனும்
விடிந்து எழுந்திருந்து விக்கிரம னென்ன சொல்வான்
ஏழுபேர் தூதுவரே இப்போதே நீங்கள்போய்
பூசணியை இங்கு பிடித்தோடி வாருமென்றான்
சொன்னவுடன் தூதரெல்லாம் சுருக்கா யெழுந்திருந்து
பூசணியாள் தானிருந்த பொன்னாலைச் சாலைபார்த்தார்
ஏழுசுற்றுக் கோட்டைதேடி யெங்குமில்லை பூசணியாள்
கண்டிநகர் முழுதுங் காணவில்லை யென்றார்கள்
காணாமல் கால்சோர்ந்து கைநெறித்து மெய்மயங்கி
நாங்களென்ன செய்வோமையா ராசாவே யென்றார்கள்
கலங்கி மனத்துயராய்க் கள்ளமனத் தூதுவர்கள்
என்னுப்பைத் தின்று எனக்கிடரு செய்கிறீரே
வாள்கொண்டு வெட்டியும்மை வதைத்திடுவே னிப்பொது
உற்றகருமத்தை யுரைத்திடி வீரென்றுசொன்னான்
அதைக்கேட்ட தூதுவர்கள் அரசனடி பணிந்து
அரசே அபயம் அபயமெனக் காருமென்றார்
உம்முடைய உணவுதின்று உமக்குத் துரோகஞ் செய்வோமா
பூசணியாள் கண்டிக்குள் பூமானே இல்லையென்றார்
அப்படியா செய்தியென்று அரசன் மிகவெருண்டு

காட்டுகிறேன் என்திறத்தைக் கைநொடிக்குள் தூதுவரே
இப்போது நீங்கள் சென்று மங்கிலியத்தைக் கொணர்ந்து
என்முன் விடுவீர்கள் என்னுடைய தூதுவரே
என்று சொல்லி விக்கிரமன் இதைக்கேட்ட தூதுவர்கள்
உள்ளம் நடுங்கி உடல்குமுற ஓடினரே
மங்கிலியந் தன்னை யந்த மகாவீரர் கண்டல்லோ
விக்கிரமசிங்கன் விரைவில்வரச் சொன்னாரம்மா
உத்தமியே வாருமம்மா உன்மனது சம்மதியோ
பிள்ளைச் சலிமனமே பேசம்மா பேதையரே
என்றார்கள் தூதுவர்களேந்திழையைத் தான்பார்த்து
அப்போது கேட்டந்த மங்கிலிய மென்னசொல்வாள்
அவ்வரசன் நீதியற்ற அழுக்குணத்தானா யிருக்கும்
அறிவுள்ள ராசனென்றா லழைப்பானோ யெந்தனைத்தான்
ஆலப்பிள்ளை வாராராம் அவரோடு வாரேனென்று
சொல்லுமண்ணே ராசனுக்குந் தொகுப்பா யிதனையென்றான்
வார்த்தைகளைக் கேட்டந்த தூதுவர்களோடி வந்து
மங்கிலியஞ் சொன்ன சொல்லை மன்னவரே நீர்கேளும்
ஆலப்பிள்ளை வராராம் அவரோடு வாராளாம்
கோபிக்க வேண்டாம்குணமுள்ள ராசாவே
இதைக்கேட்டு மனங்கலங்கி இராசன் கிலேசமுற்று
நான்போறேனென்று சொல்லி நடந்தானே ராசாவும்
வீரவாள் கைபிடித்து விக்கிரம சிங்கமன்னன்
சென்றந்த மங்கிலியத்தை சேர்த்துப் பிடித்தானே

எங்கேயடி பூசணியாள் என்றவள் கையைப் பிடித்து
அனியாயஞ் செய்தானே அந்த விக்கிரமசிங்கனவன்
ஐயகோ ஐயகோ அனியாயம் அனியாயம்
விக்கிரம ராசாவே அநீதஞ் செய்யாதே
பூசணியைக் காணவில்லைப் போனவளை நானறியேன்
என்றழுதாள் மங்கலியம் ஏழை முகங்காட்டியவள்
மயிரைப்பிடித்திழுத்து மண்மீதிலே வீழ்த்தி
மக்களைக் கொண்டாடியென்றுமன்னவனுஞ்சொன்னானே
நித்திரையிலே கிடக்கும் ஏழுபேர் மக்களையும்
கூட்டிவந்து ராசாமுன் குறுகி நின்றாள் மங்கலியம்
ஒவ்வொரு பிள்ளைகளை உரலிலே நீபோட்டு
உலக்கைதனைத் தூக்கித் துவையென்றானவ்வரசன்
ஒவ்வொருவராய்ப் போட்டு உலக்கைதனைத் தூக்கியவன்
துவைத்தாளே மங்கலியம் துயரத்துடனன்னேரம்
பார்த்து நின்ற வீரசிங்கன் பதைத்துமனந்துடித்தந்த
உதிரமுழுதுமள்ளி உண்டான் வீரசிங்கன்
மக்களைக் கொன்றானே மாபாவியானேனோ
புழுவாய்த்துடித்துப் புரண்டழுதாள் மங்கலியம்
மன்னனிதையறிந்தால் மாய்த்திடுவாரே வுயிரையென்று
அந்த ஏழுமக்கள் தம்முதிரம் இன்பமுடனே குடித்து
இரத்த வெறியாகி நின்றான் வீரசிங்க னன்னேரம்
வீரவாளுருவியவளை வெட்டிவிட்டான் இரண்டு துண்டாய்
வீரவாள் தன்னாலே வெட்டுண்ட மங்கலியம்

வேருடல் வேறாய் தத்தளிக்கும் வேளையிலே
பூசணி எங்கேயடா அப்பொல்லாத பூதமென்று
கண்ணெதிரே நிற்பானென்றால்காயவைப்பேன்கீறியல்லோ
என்னிடம் பூசணியைக் கொடாது விட்டால் மந்திரியே
கொல்லுவே னென்று சொன்னான் கோபத்துடன்வேந்தன்
அன்னேர மாலப்பிள்ளை வாறாரென்ற செய்திகேட்டுப்
போய்த்தா னொளித்திருந்தான் பொன்னிறக் கச் சேரிக்குள்
ஏழு அறை திறந்து இருட்டறைக்குள்ளே புகுந்து
ஒளித்திருந்தான் ராசாவும் ஊரறியாமல்
அன்னேர மாலப்பிள்ளை ஆத்திரத்தோடே நடந்து
கொழும்பு நகர்மேவி கொம்பனி இங்கிலீசாருடன்
கண்டிதனைப் பிடித்துத் தாரே நானென்றுசொல்லி
கைப்பிடியா இங்கிலீசாரைக் கூட்டியிங்கு வருகையிலே
மக்கள் மனைவியெல்லாம் மாண்டு மடிந்தசெய்தி
காதிலே கேட்டுத் கலக்கமுற்றுத் தானழுதான்
மக்கள் மனைவியென்று மார்போடு தானறைந்து
மண்ணில் விழுந்து புரண்டழுதானாலப்பிள்ளை
அழாதேயடா நீ என்று இங்கிலீசார் தானவனைத்
தேற்றி எடுத்தணைத்து வந்தார்க ளெல்லோரும்
இங்கிலீசார் தன்னையங் கிருத்தியந்த ஆலப்பிள்ளை
அடித்தான் தலைக்கதவை அப்பாலே தான்திறக்க
ஏழு அறையுடன் இருட்டறைக்குள்ளே புகுந்து
குடுமி தன்னைப்பிடித்துக்குலுக்கிநெட்டி தான்வாங்கி

கள்ளப்பயலே என்று கன்னத்திலேயறைந்தான்
அறையோடு ராசனப்போ அரைச்சீவனானே
இவனைப் பிடியுமென்று உதைத்துருட்டி விட்டானே
இங்கிலீசார் தான்பிடித்து இராசாவை மட்டடக்கி
வைத்தனரே காவலிலே வண்மையுள்ள இங்கிலீசார்
கண்டி பிடித்தான் கனதேசமும் பிடித்தான்
நகருமுழுதும் பிடித்தான் நம்நாடு தான்பிடித்தான்
பூசணியாள் தானிருந்த பொன்னிறச்சாலைகளும்
ஏழுசிற்றுக் கோட்டையிலும் இனிதிருத்திப்பட்டாளம்
அணிவகுத்துவைத்தாரே ஆண்மையுள்ள இங்கிலீஸார்
இப்படி வந்த இங்கிலீஸார் இலங்கை முழுவதும் பிடித்து
அந்த வேளையிலே அறிவினாலோசித்து
ஆலப்பிள்ளை நம்முன்னே அச்சஞ்சிறிதுமின்றி
அடித்தானே விக்கிரமனை அப்படிப்பட்டவனை
வைத்திருந்தால் நமக்கும் வருமே கெடுதியென்று
சூட்சமுள்ள கப்பலொன்று சொல்லிச் செய்வித்தார்கள்
ஆலப்பிள்ளையைக்கப்பலிலேற்றி நடுக்கடலில்போகவிட்டு
போகையிலே சூத்திரத்தைப் பொறித்துவிட்டார் இங்கிலீஸார்
ஆலப்பிள்ளை நீரில் அமிழ்ந்து மடிந்துவிட்டான்
மாண்டுமடிந்தானே வைகுந்தஞ் சேர்ந்தானே
இப்படியே இங்கிலீஸார் இந்த இலங்கை முற்றும்
தப்பாமலே பிடித்துத் தானாண்டு வாறார்கள்
சொன்னார்கள் முன்னோர்கள் சுருக்கமாயிக்கதையை

மென்மேலும் கீர்த்திபெற்று விளங்கி நடந்திடவே
ஊராரு மிக்கதைதான் எளிதாயுலகிலுள்ளோர்
படித்து அறியவென்று பக்குவமாய்ச் சீர்திருத்தி
முன்னோ ரெழுதி வைத்த முன்றயைத் தழுவி
இன்னாளிலெவரும் இலகுவாய் கற்றறிய
பாரிலுள்ளோர்க்குப் பற்பல புத்தகங்களைச்
சீர்யவழியிற் செய்துதவி வருபவராம்
சரஸ்வதி புத்தகசாலை யதிபர்களச்சிட்டு
பிரசித்தியுடனே விற்பவருமிக்கதையை
அன்பாய்ப் படித்தோர்கள் ஆசையாய்க் கேட்டவர்கள்
துன்பமொருக்காலம் தோகையர்க்குச் செய்யாமல்
இன்பமாக இவ்வுலகில் இனிதாக வாழியவே.

முற்றிற்று

# கண்டிராஜன் ஒப்பாரி

## கலாநிதி முருகு தயாநிதி

"சொன்னார்கள் முன்னோர்கள் சுருக்கமா யிக்கதையை
மென்மேலும் கீர்த்திபெற்று விளங்கி நடந்திடவே
ஊராரு மிக்கதைதான் எளிதா யுலகிலுள்ளோர்
படித்து அறியவென்று பக்குவமாய்ச் சீர்திருத்தி
முன்னோரெழுதி வைத்த முறையைத் தழுவி
இன்னாளி லெவரும் இலகுவாய்க் கற்றறிய
பாரிலுள்ளோர்க்குப் பற்பல புத்தகங்களைச்
சீரிய வழியிற் செய்துதவி வருபவராம்
சரஸ்வதி புத்தகசாலை யதிபர்க ளச்சிட்டு
பிரசித்தியுடனே விற்பவருமிக்கதையை
அன்பாய்ப் படித்தோர்கள் ஆசையாய்க் கேட்டவர்கள்
துன்பமொருக்காலம் தோகையர்க்குச் செய்யாமல்
இன்பமாக இவ்வுலகில் இனிதாக வாழியவே"



கண்டியரசன் ஒப்பாரியின் முடிவுரை போல அமையும் இப்பகுதி, அந்த வாய்மொழி இலக்கியத்தின் வரலாறாகவே அமைகின்றது. அந்த வரலாற்றில், இப்போது கலாநிதி முருகு தயாநிதியும் இணைந்து கொள்கின்றார். ஒப்பாரியின் அச்சுப் பிரதிகள் அருகி விட்ட நிலையில், சிதைந்த நிலையில் கிடைத்த ஒரே ஒரு பிரதியை வைத்துக் கொண்டு, வாய்மொழி மரபாகப் பேணி வந்த பெண்களைக் கொண்டு, சிதைவால் உண்டான இடை வெளியை நிரப்பிப் பதிப்பித்துத் தருகின்றார் அவர். இப்படி யான பணிகள் மூலம் ஈழத்து இலக்கிய வரலாற்றின் இடைவெளிகள் நிரப்பப்படலாம். இத்தகைய இலக்கியங்கள் நேர்மையோடு செவ்விய முறையிலே பதிப்பிக்கப்பட வேண்டியது எமது இருப்பை நிலை நாட்டும் முயற்சியாகவும் அமையும். தயாநிதி ஈழத்துக் கலாநிதியத்தைப் பெருக்குவதற்கு எடுத்திருக்கும் முயற்சிக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

விடயம் – இலக்கியம்

9 789554 317321

விலை ரூபா 350.00

எவகிறீன் அச்சகம் பிறைவேட் லிமிட்டட், மட்டக்களப்பு. 065 2222607